Registered as a News Paper


பொழிவு: 27
குவிப்பு: 10
பக்கங்கள்: 16
விலை: 100/-
மார்கழி: 2022
தை : 2023

# மன்னா

(ISSN 1800-2641) MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 41வது புதிய ஆண்டுப்பயணம்"



## இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஆன்பான வாசகர்களே, அன்பான வாடிக்கையாளர்களே, விநியோகஸ்தர்களே, எழுத்தாளர்களே, இறை நம்பிக்கையாளர்களே உங்கள் அனைவருக்கும் எமது மன்னார் மறைமாவட்ட ஆயர்தந்தை பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் இறையாசிகளுடன் எமது மன்னா பத்திரிகையின் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இறையாசீர் என்றும் உங்களோடு இருப்பதாக.

"ஆண்டவர் உனக்கு ஆசி வழங்குவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச் செய்து உன்மீது அருள்பொழிவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன்பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக!" (எண் 6:24-26)

## குருத்துவ அர்ப்பணத்தின் பொன்விழா காணும் மன்னார் மறைமாவட்ட ஆயர்

கடந்த 06.01.2023 வெள்ளிக்கிழமை அன்று தனது குருத்துவ அர்ப்பணத்தின் 50வது ஆண்டில் தடம்பதித்த எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களை வாழ்த்துவதுடன் அவர் தனது இறைபணியை நலமாகத் தொடரச் செபிக்கின்றோம்.

ஆயர் தந்தை அவர்கள் 1973ம் ஆண்டு மார்கழித் திங்கள் 06ம் நாள் மறைந்த திருத்தந்தை புனித 6ம் பவுல் அவர்களால் உரோமை வத்திக்கான் நகரில் அருட்பணியாளராகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

மேலும் 07.01.2023 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு புனித செபஸ்தியார் பேராலயத்தில் அவரது பொன்விழா நன்றித் திருப்பலியை மிகச் சிறப்பாக ஒப்புக் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

→08

## முன்னாள் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட திருஅவை சார்ந்த இறுதி அஞ்சலிகள்

"ஆண்டவரே, நான் உம்மை அன்புகூர்கிறேன்"

கத்தோலிக்கத் திருஅவையை உலகளாவிய ரீதியில் 8 ஆண்டுகள் மிகச் சிறப்புடன் வழிநடத்திச் சென்ற, 95 வயது நிரம்பிய நம் முன்னாள் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் அவர்கள் டிசம்பர் 31 சனிக்கிழமை அன்று இறைபதமடைந்தார். அவரது இறுதிப் பயணச் சடங்குகள் கடந்த ஜனவரி 05 2023 வியாழக்கிழமை அன்று திருத்தந்தையின் பிரத்தியேக செயலாளர் பேராயர் ஜோர்ஜ் கான்ஸ்வெயின் ஆண்டகை தலைமையில் உடல் பேளைக்குள் வைக்கப்பட்டு 16ம் ஆசீர்வாதப்பரின் ஆசைப்படி திருத்தந்தை புனித 2ம் அருளப்பர் சின்னப்பரின் உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையில் திருத்தந்தையின் உடல் மூன்று அடுக்கு பேளையில் வைத்து புனித பேதுரு பசிலிக்கா வளாகத்திலுள்ள கல்லறைத் தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது.



## 61வது குருத்துவ நினைவு நாள்



மன்னார் மறைமாவட்ட முன்னைநாள் குருமுதல்வர் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார் தனது 61வது வருட குருத்துவ நாளை நினைவுகூர்ந்தார். மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா எமது குருவை வாழ்த்துவதோடு அவருக்காக இறையாசீர் வேண்டி நிற்கின்றது.

## புதிய நியமனம்



யாழ். அமதிகளின் புதிய மாகாணத் தலைவராக அருட்பணி. ஜெயந்தன் பச்சேக் அமதி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மன்னார் மறைமாவட்டத்தின் பேசாலை மண்ணின் மைந்தராவார். மன்னா பத்திரிகை சார்பாக வாழ்த்துகின்றோம்.

## பொங்கல் நல்வாழ்த்துக்கள்




ஜனவரி 15ம் திகதி தைப்பொங்கல் தினமாகும். உலகத்தைப் படைத்த முழுமுதலாம் இறைவனுக்கு இறைவன் வழங்கிய வாழ்வின் நிறைவிற்கு நன்றி கூறுகின்றோம்.
மன்னா வாசகர்கள் அனைவருக்கும் தமிழர் திருநாளாம் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.
உங்கள் உள்ளங்களும், இல்லங்களும் இறை அன்பினால் பொங்கி வழியட்டும்.

- மன்னா புதிப்பாசிரியர் -

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

நல் விடுதலையையும் சமாதானத்தையும் நிலைபேறாக எமக்கு அளித்த பாலகன் இயேசுவின் இனிய நாமத்தில் புத்தாண்டின் நல்வாழ்த்துக்கள் கூறி தொடர்வது :

இம் மாதத்தில் முழு உலகுமே இணைந்து மீட்பராம் கிறிஸ்து இயேசுவின் பிறப்பை பெருவிழாவாக கொண்டாடி மகிழ்கின்றது. மார்கழி அன்று உலக மீட்பராம் கிறிஸ்து எதற்குமே பெறுமதியில்லாத மாட்டுத் தொழுவமதில் மனிதனாக பிறந்தார். இன்றைய அதி நவீன சூழலில் கிறிஸ்து இயேசுவின் பிறப்பு கொண்டாட்டமானது வரையறையற்ற வகையில் வெளி ஆடம்பரங்களுடன் கொண்டாடுவதாக அமைந்திருப்பதை எம்மால் உணர முடிகின்றது.

''உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக." (லூக்கா 2: 14) என்று வானதூதர் அன்று பாடியது மன அமைதி தொடக்கம் உலக அமைதி வரைக்கும் என்பதாகும். கிறிஸ்து பிறப்பின் உண்மை நோக்கம் யாதெனில் "மனங்களில் நல் அமைதியை உருவாக்குவதே ஆகும்." கிறிஸ்து பிறப்பை கொண்டாடும் நான், எனது சமூகம், எனது பங்கு, எனது மறைமாவட்டம், எனது நாடு முழுவதிலும் நல் அமைதி, உண்மையான மகிழ்ச்சி குடிகொண்டுள்ளதா? என சற்று சிந்திப்போம். எமது கொண்டாட்டங்கள் யாவும் அர்த்தமுள்ளதாக அமைந்துள்ளதா? என்பதனை நாம் சிந்திப்போம்.

இறைவன் கொடையினால் எமக்கு மீண்டும் ஓர் புதிய ஆண்டு கிடைத்துள்ளது. இவ் ஆண்டிலே எமது ஆற்றல் திறமைகளை இறை மகிமைக்காக பயன்படுத்த நாம் உறுதி கொள்வோம். தை - 01ம் திகதியை தாய்த் திருஅவை அன்னை மரியாவுக்கு ஒப்புக் கொடுத்து எம் அனைவருக்கும் தாயாக அன்னையை அளித்த மகிமையை நினைந்து கொண்டாடுகின்றது. எம் அனைவரையும் அன்னையின் அரவணைப்பில் ஒப்புக் கொடுப்போம். இவ்வுலக தீமைகளிலிருந்து நாம் பாதுகாப்பு பெற அன்னையின் பரிந்துரையை வேண்டுவோம். மற்றும் தைத் திங்கள் 16ம் நாள் எம் தாய்நாட்டின் திருத்தூதராம் புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் திருவிழா இலங்கை திருஅவையில் கொண்டாடப்படுகின்றது. இலங்கை விசுவாச வளர்ச்சியில் முதன்மை பங்காளரான புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் விழாவைக் கொண்டாடும் நாம் எம் சிறுசிறுஆன்மீக பணிகள் மூலம் திருஅவையின் வளர்ச்சியில் பங்காற்றிட உறுதி கொள்வோம். மேற்குறிப்பிட்ட சிந்தனைகளுடன் நாம் புதிய ஆண்டிலே இறை மகிழ்ச்சியுடன் எம் பணி வாழ்வை தொடர்வோம்.. உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

# மனிதம் படைக்க வாழ்க்கையை புத்தாண்டில் புதுப்பிப்போம்

**பேரருட்திரு. ஜோசப் பொன்னையா ஆண்டகை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்.**



2022ம் ஆண்டு கடந்து சென்று விட்டது. 2023ம் ஆண்டானது புதிதாய் எமக்காக மலர்ந்திருக்கிறது. புத்தாண்டில் நமது வாழ்க்கையை வரவேற்று புதிய எண்ணங்கள், புதிய உத்வேகம், புதிய குறிக்கோள், புதிய முயற்சிகளை புதிய பானையிலிட்டு புன்னகைத் தீயை மூட்டி புது வாழ்வாய் பொங்கட்டும். நம்மை விட்டுச் சென்ற பழைய வருடத்துக்கு நாம் விடைகொடுத்தாலும் அந்த வருடம் நம்மில் ஏற்படுத்திய தாக்கம் சில வேளை மறக்க முடியாத நிகழ்வுகளாய் இருக்கலாம். இவை வாழ்க்கையின் நிதர்சனமே.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடையது" எனக் கூறிச் சென்றார் வள்ளுவர். இன்று எம்மோடு வாழ்பவர்கள் நாளை இருப்பார்களா என்பது நிச்சயமில்லை. இனிவரும் நாள் எல்லாம் இன்பமாய், புத்தாண்டில் எதிர்காலம் நம் எண்ணம் போல் அமையட்டும். கடந்து வந்த பாதைகளை விட கடக்கவிருக்கும் பாதைகளில் நாம் சந்திக்கப்போகும் சவால் நிறைந்த அனுபவங்கள் யாருக்கும் தெரியாது. திசை திரும்பிவிட்ட படகு மேல் ஏறிப்பயணிக்கும் நம்மை இந்த புத்தாண்டில் நமது கனவுக் கரையில் கொண்டு போய்ச் சேர்க்கட்டும்.

மாற்றங்கள் அனைத்தும் பொதுவாயினும் வாழ்க்கையில் புதிய பார்வைகளை நாம் மேற்கொள்ள புத்தாண்டு ஒரு வாய்ப்பு. பிறக்கும் இனிய புத்தாண்டு நம் அனைவருக்கும் அன்பையும் மகிழ்ச்சியையும் நோயில்லாத செல்வத்தையும் கொடுக்கும் ஒரு புதிய ஆண்டாக மலர, இந்த ஆண்டு நமது வாழ்வில் எல்லா விதமான வெற்றியையும், அன்பையும், சகோதரத்துவத்தையும் அள்ளிக் கொடுக்கட்டும்.

இயற்கைதனிலே பூமி சுழலும் காலம் அறிந்து கடிகாரம் சுழலும். அது செயற்கை. காலையில் சூரியன் எழுந்து மாலையில் மறையும், இது இயற்கை. ஒவ்வொரு நாளும் பெருமை மிக்கது. உழைத்தவன் அறிவான் உழைப்பின் அருமை. நமது உழைப்பின் அருமை தான் நமது உயர்வுக்குப் பெருமை. முயற்சி விதைகளைத் தூவி நம்பிக்கை செய்வோம். நம்பிக்கை வைக்கும் நண்பர்களுக்கு புதிதாய் பிறந்த ஆண்டை குழந்தை போல் அன்பாய் வளர்த்து அர்த்தமுள்ளதாக்குவோம்.

இன்றைய நாளே நமது வாழ்வில் விலைமதிப்பு மிக்க சொத்து. நேற்று என்பதை மகிழ்ச்சியான கனவாகவும், நாளை என்பதை நம்பிக்கையின் எதிர்ப்பார்ப்பாகவும் இன்றே நாம் சிறப்பாக வாழ்வது தான் முக்கியம் என்பதைக் கொண்டு வாழ்வோம். இறையரசின் விழுமியங்களான அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம், பகிர்வு போன்றவைகள் இம்மண்ணில் மலர நமது பங்களிப்பை தொடர்ந்து அளித்து புத்தாண்டில் காலடி எடுத்து வைப்போம். ''உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னை வணங்கும்''.

⇨ ஒவ்வொரு நாளையும் புதிதாய்த் தொடங்குவோம்.

⇨ விடியலின் வெளிச்சம் இருளைப் போக்குவதைப் போல் ஒவ்வொரு உதயமும் நமது வாழ்க்கையை வெளிச்சமாக்குவோம்.

⇨ நம் சொல், செயல், சிந்தனை எப்போதும் புதுவரவாய் மாற புதிதாய் வரவேற்போம். புத்தாண்டை மகிழ்விப்போம்.

⇨ மனிதம் படைக்க வாழ்க்கையை புத்தாண்டில் புதுப்பிப்போம்.

"நேற்று என்பது உடைந்த பானை நாளை என்பது மதில் மேல் பூனை. இன்று என்பது நம்கைவீணை" எனவே நிகழ்காலத்தை உருப்படியாய் பயன்படுத்து அப்போது விழுந்திடும் உன் கழுத்தில் மாலை... என்பான் மாயமான். நிகழ்காலம் என்பது மட்டும் தான் நிஜமான பூமி. வாழ்க்கை வேறு எங்கேயும் இல்லை. இங்கேயே இந்த களத்தில். ஆம் நிகழ்காலத்தை நிஜமாகவே நல்ல முறையில் நாம் பயன்படுத்தினால் சரித்திரத்தில் நிலையானதொரு இடத்தைப் பெறுவோம் என்பதில் எந்தவொரு மாற்றுக் கருத்தும் இல்லை. ஆகவே இப்போது, இந்த நொடியில் வாழும் கலையைக் கற்றுக் கொள்வோம். அதன் வழியாக வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மனிதம் படைக்க வாழ்க்கையை புத்தாண்டில் புதுப்பிப்போம்.●

நன்றி ''வெட்டாப்பு''

# மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி
## மாசி 2023

02. புனித காணிக்கை மாதா திருவிழா - சின்னக்கடை (பேராலயம்), காத்தான்குளம், சாம்பல்தோட்டம், துள்ளுகுடியிருப்பு.
- புனித அன்னை வேளாங்கண்ணி திருவிழா - படகுதுறை
  புனித செங்கோல் மாதா திருவிழா - முத்தரிப்புத்துறை

04. இலங்கை மாதா திருவிழா
- அம்பிட்டிய தேசிய குருத்துவ கல்லூரி விழா
- புனித செங்கோல் மாதா திருவிழா - கற்குழி

11. புனித லூர்து அன்னை திருவிழா - ஜீவநகர், முதலைக்குத்தி, இரண்டாம் பண்ணை, பாசிமோட்டை இறம்பைக்குளம், கீளியன்குடியிருப்பு, பிரமணாலயங்குளம், மாந்தை, சிறுத்தோப்பு, மாதா கிராமம் (குஞ்சுக்குளம்), லூர்துநகர் (வஞ்சியன்குளம்), மரக்காரன்பளை, பேசாலை (லூர்துகெபி)
- மரியாள் திருவிழா - சௌத்பார்
- மேதகு பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் ஆயர் - ஆயர் அபிசேகம் (2012)

12. புனித லூர்து அன்னை திருவிழா - தேவன்பிட்டி
16. புனித கப்பலேந்தி மாதா திருவிழா - நொச்சிக்குளம்
21. புனித இராயப்பர் திருவிழா - கத்தாளம்பிட்டி (அந்தோனியார்புரம்)
22. திருநீற்றுப்புதன்

**அன்பான வாடிக்கையாளர்களே!**
**மன்னா பத்திரிகையின் 2022ம் ஆண்டுக்கான பணத்தை தயவுசெய்து இம்மாதமே செலுத்தி உங்களது ஒத்துழைப்பை நல்குவதன் மூலம் விநியோகத்தை துரிதப்படுத்த முடியுமென்பதை அறியத்தருகின்றோம்.**

# குருத்துவ ஆண்டின் ஐம்பத்தொன்பதாவது நிறைவு



ஓய்வுநிலை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் (21.12.2022) குருத்துவ வாழ்வில் ஐம்பத்தொன்பது அகவையில் அடியெடுத்து வைக்கும் ஆயனே உமது நாமம் வாழ்க! உடல் உள நலன்கள் பலவும் பெற்று அன்னை மரி அருளில் நீண்ட பல ஆண்டுகள் வாழ மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.●

# துயர் பகிர்கின்றோம்



வவுனியா இறம்பைக்குளம் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சார்ந்த **அருட்சகோதரி நீற்றா கஸ்மீர்** அவர்கள் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் **07.01.2023** இறைபதம் அடைந்துள்ளார். அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக எமது மன்னார் மறைமாவட்டம் சார்பாக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.●

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சார்ந்த **அருட்சகோதரி மேரி யூலியானா குலாஸ்** அவர்கள் திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் 08.01.2023 அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அவரது ஆன்ம இளைப் பாற்றிக்காக எமது மன்னார் மறை மாவட்டம் சார்பாக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.●



# அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் மறைவின் 38வது ஆண்டு நினைவு



1985.01.06ம் திகதி வங்காலை பங்கில் படுகொலை செய்யப்பட்டு தமிழினத்துக்காய் உயிர் நீத்த அமரர் அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் மறைவின் 38வது வருட நினைவு நாள் 2023.01.06 வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி முடிவில் பங்கு மக்கள் புடை சூழ அமரரின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.●

## 2023ம் ஆண்டிற்கான திருத்தந்தையின் செபக்கருத்துக்களில் தை மாதத்திற்கானது

**கல்வி பயிற்றுவோருக்காக:**

கல்வி கற்பிப்போர் நம்பத் தகுந்த சாட்சிகளாவும் போட்டி மனப்பான்மையை தவிர்த்து சகோதரதிதுவத்தை விதைப்பவர்களாகவும், அனைத்திற்கும் மேலாக, இளையோருக்கும், இலகுவில் பாதிப்பிற்குள்ளாவோருக்கும் உதவுகின்ற -வர்களாகவும் திகழ வேண்டி மன்றாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்டச் செய்திகள்

## புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியின் புதிய கல்வியாண்டு தொடக்க நிகழ்வும் மற்றும் ஆயர் தந்தை அவர்களின் குருத்துவ பொன்விழா கொண்டாட்டமும்



கடந்த 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மன்னார் மறைமாவட்டத்தில் இயங்கி வரும் புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியில் இடம்பெற்ற 2023/2024ஆம் ஆண்டிற்கான புதிய கல்வியாண்டு தொடக்க நிகழ்வும், ஆயர் தந்தை அவர்களின் குருத்துவ பொன்விழா கொண்டாட்டமும் மற்றும் இந்த புதிய ஆண்டிலே இணையவிருக்கும் மாணவர்களுக்கான வரவேற்பும் இக்கல்லூரியின் அதிபர் பெருமதிப்பிற்குரிய கலாநிதி அருட்பணி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அடிகளாரின் தலைமையிலே, தனது குருத்துவ வாழ்விலே அகவை 50 நிறைவு செய்து பொன்விழாக்காணும் எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களை பிரதம விருந்தினராகவும், எமது மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் பெருமதிப்பிற்குரிய பி. கிறிஸ்துநாயகம் அடிகளாரை ஆன்மீக சிறப்பு விருந்தினராகவும் கொண்டு, எமது மன்னார் மறைமாவட்டத்தின் முன்னையநாள் குருமுதல்வர்கள் பெருமதிப்பிற்குரிய அருட்பணி சேவியர் குருஸ் மற்றும் அருட்பணி விகரர் சோசை அடிகளார், இவர்களோடு இணைந்து இக்கல்லூரியில் கல்விகற்பிக்கும் விரிவுரையாளர்களான 15 அருட்பணியாளர்கள், இக் கல்லூரியின் விரிவுரையாளர் ஓய்வுபெற்ற முன்னையநாள் மன்னார் மாவட்ட கல்விப்பணிப்பாளர் பெருமதிப்பிற்குரிய திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன், இக்கல்லூரியின் விரிவுரையாளரும் மன்னார் மாவட்டத்தின் ஓய்வுபெற்ற முன்னையநாள் உதவி மேலதிக அரசாங்க அதிபருமான மேன்மைதங்கிய பரமதாசன், இன்னும் பல அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மாணவர்கள் கூடி மகிழ்வுடன் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வுகளின் ஆரம்பமாக விருந்தினர்கள் நுழைவாயிலிலே மாலையிட்டு வரவேற்கப்பட்டு, பின்னர் கல்லூரி முன்றலிலே கல்லூரிக் கீதம் இசைக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது, தொடர்ந்து ஆயர் தலைமையிலே கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலியானது ஆயரின் குருத்துவ 50 ஆண்டுகள் பணிக்கு இறைவனுக்கு நன்றி சொல்லியும், புதிய மாணவர்களை வரவேற்றும் மேலும் புதிய கல்வியாண்டின் வெற்றிக்காகவும் இறைவரம் வேண்டி ஒப்புக்கொடுக்கப் பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து ஆயர் தந்தையின் குருத்துவ பொன்விழா நிகழ்வின் மகிழ்ச்சியின் தருணம்




இயக்குனர் மற்றும் மாணவர்களால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. தொடர்ந்து இக்கல்லூரியின் அதிபர் பெருமதிப்பிற்குரிய கலாநிதி அருட்பணி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அவர்களால்



கடந்த கல்வியாண்டில் இடம்பெற்ற நிகழ்வுகளின் அறிக்கையும் மற்றும் புதிய ஆண்டிற்கான திட்ட வரைபும் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், இக்கல்வியாண்டின் தொடக்க நாளிலே 'Lectio Brevis' (Inaugural Lecture) 'ஆரம்ப சுருக்க விரிவுரையினை' இக்கல்லூரியிலே 'ஆன்மீக இறையியல்' மற்றும் 'திருஅவை வரலாறு' போன்ற பாடங்களை கற்பிக்கும் அருட்பணி S. அன்ரன் அடிகளார் "சூழல் ஆன்மீகம்" (Eco-Spirituality" எனும் தலைப்பிலே மிகவும் திறமையாக நிகழ்த்தினார். உரையின் ஒரு பகுதியாக அங்கு கூடியிருந்த -வர்களால் பல கேள்விகளும், சில முன்மொழிவுகளும் மற்றும் அவதானிப்புக்களும் பகிர்ந்துகொள்ளப்பட்டன.

இந்த 2023/2024 கல்வியாண்டிலே இக்கல்லூரியிலே முதலாம் வருடத்திலே 53 மாணவர்களும், இரண்டாம் வருடத்திலே 21 மாணவர்களும், நான்காம் ஆண்டு இளங்கலைமானி இறுதிப் பட்டப்படிப்பிலே 11 மாணவர்களும், மொத்தமாக 85 மாணவர்கள் இக்கல்லூரியிலே கல்வி பயில்கிறார்கள். அத்தோடு இளங்கலைமானி (B.A) முதுகலைமானி (M.A), மற்றும் முனைவர் பட்டங்கள் (Ph.D) பெற்ற 23 விரிவுரையாளர்கள் இந்தக் கல்வியாண்டிலே கல்வி கற்பிக்கின்றார்கள்.

இறுதியிலே குழு புகைப்படம் எடுக்கப்பட்டு அன்றைய நாளின் நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றன. ●

## VAROD அமைப்பின் இல்லப்பயனாளிகளின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு



VAROD அமையமானது பண்டிகைக் காலங்களில் தனது இல்லப் பயனாளிகளாக காணப்படும் சிறார்கள், இளைஞர்கள் மற்றும் ஏனையோரையும் மகிழ்வித்து வருவது வழமையான செயற்பாடாகக் காணப்படினும் நத்தார் பண்டிகையானது மிகவும் சிறப்பாகவே அமைகின்றது. இவ்அமையமானது தனது இல்லப்பயனாளிகளுக்கான வருடாந்த ஒளி விழாவினை 27-12-2022 அன்று மிகச் சிற்ப்பாக கொண்டாடி மகிழ்ந்து குறிப்பிடத்தக்கது. ●

## வவுனியா பம்பைமடு இறைஇரக்க ஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வு



கடந்த 26-12-2022 திங்கட்கிழமை மாலை 5:15 மணியளவில் வவுனியா பம்பைமடு இறைஇரக்க ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பின் செய்தியினை எடுத்துக்காட்டும் ஒளிவிழா நிகழ்வு நடாத்தப் பட்டது. பங்குத்தந்தை அருட்பணி ஜெகநாதன் CMF அடிகளாரின் தலைமையில் பிரதம அதிதியாக வவுனியா கோட்ட முதல்வரும், வவுனியா வேப்பங்குளம் பங்குத்தந்தையுமான அருட்பணி அ.ஆரோக்கியம் அடிகளாரினால் குழந்தை இயேசு பாலகனை கரங்களில் ஏந்தியவாறும், ஒளிச்சுடரோடும், இறைவழிபாடு நடைபெற்று ஒளி விழா மங்களகரமாகவும், மிக சிறப்பாக ஆரம்பமாகி நடைபெற்றது. ●

## வவுனியா மடுக்குளம் புனித யூதா ததேயு ஆலய அர்ச்சிப்பு விழா



பம்பைமடு பங்கின் துணை ஆலயங்களில் ஒன்றான புனித யூதா ததேயு ஆலயம் மடுக்குளம் கடந்த 04-12-2022 அன்று காலை 8:30 மணியளவில் எம் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் ஆசீர்வதிக்கப்பட்டு ஆலயம் திறந்து வைக்கப்பட்டது.

திருப்பலி முடிவில் புனிதரின் திருச்சுரூப ஆசீர்வாதமும், ஞாபகசின்னம் வழங்கல், ஞாபக கல்வெட்டு திறப்பு, தென்னங்கன்று நடலுடன் கிராம மக்களின் ஒருங்கிணைந்த அழைப்பால் விருந்தோம்பல் உபசரிப்போடு நிகழ்வு அர்த்தமுடன் நிறைவு செய்யப்பட்டது. ●

## மன்னார் புனித யோசேவ் வாஸ் இறையியல் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வு



மன்னார் புனித யோசேவ் வாஸ் இறையியல் 2022ஆம் ஆண்டிற்கான கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வுகள் 17.12.2022 சனிக்கிழமை அன்று இக்கல்லூரியின் அதிபர் பெருமதிப்பிற்குரிய கலாநிதி அருட்பணி அ. கிறிஸ்ரி றூபன் பெர்னாண்டோ அடிகளாரின் தலைமையிலே, மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை கல்லூரியின் கேட்போர் கூடத்திலே மகிழ்வுடன் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகவும், எமது மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் பெருமதிப்பிற்குரிய பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் சிறப்பு விருந்தினராகவும் விரிவுரையாளர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், மாணவர்கள் மற்றும் கல்லூரி ஊழியர்கள் இணைந்து சிறப்பித்திருந்தனர்.

## சமாதான நீதவானாக நியமனம்



மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த வசந்தகுமார் பிரகாஷ் சிவகுமார் இலங்கை சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 10.01.2023 அன்று மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் நீதவான் K.L.M. சாஜித் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சமூக சேவையாளரான இவர் தனது ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்தரம் வரை மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தார். விளையாட்டிலும் ஏனைய பாடவிதானங்களிலும் மாகாண மற்றும் தேசிய மட்டங்களிலும் பல விருதுகளை பெற்றவர்.


இவர் ஆன்மீகத்திலும் சமூக சேவைகளிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருஅவைச் செய்திகள்

# கடவுளுடன் இருக்கையில் நீ ஒருபோதும் தனியாக இல்லை புத்தக வெளியீடு




மறைந்த முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் சிறப்பான கருத்துரைகளடங்கிய கடவுளுடன் இருக்கையில் நீ ஒருபோதும் தனியாக இல்லை என்ற புத்தகமானது மிகச்சிறந்த இறையியலாளரின் அறிவுச்செறிவையும் ஆழமான சிந்தனைகளையும் உள்ளடக்கியுள்ளதாக தெரிவித்தார் அருள்பணி Federico Lombardi

சனவரி 09 திங்கள் கிழமை வத்திக்கான் பதிப்பகமும் (LEV), இத்தாலியின் Rizzoli பதிப்பகமும் இணைந்து வெளியிட்ட இப்புத்தகத்திற்கு முகவுரை எழுதியுள்ள இயேசுசபை அருட்பணியாளரும், வத்திக்கான் சமூகதொடர்பு அமைப்புக்களின் முன்னாள் இயக்குநரும், திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் நிறுவனத்தின் (Joseph Ratzinger-Benedict XVI Foundation) தற்போதைய தலைவருமான அருள்பணி Federico Lombardi இவ்வாறு தெரிவித்தார்.

தன் வாழ்நாள் முழுவதையும் கடவுளின் முகத்தைக் காண்பதிலேயே செலவழித்த மறைந்த முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள், 2005-ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் தேதி திருப்பீட தலைமை அதிகாரிகளுக்கு அளித்த செறிவான கருத்துக்கள் முதல் 2013ஆம் ஆண்டு பிப்ரவரி 28ஆம் நாள், திருத்தந்தை தலைமைத்துவப் பணியைத் துறந்தது வரை அவர் ஆற்றிய செறிவுமிக்கக் கருத்துரைகளின் மிகச் சிறந்தத் தேர்வுகளை உள்ளடக்கியுள்ளதாக இப்புத்தகம் வெளிவந்துள்ளது எனத் தெரிவித்தார்.

மென்மை,செறிவு, ஆழம், இணக்கம் போன்றவைகளைக் கொண்ட திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் கருத்துரைகள் அனைத்தும் மிகச் சிறந்ததாக இருந்தாலும் ஏறக்குறைய 10 கருத்துரைகளை மட்டும் உள்ளடக்கிய முதல் பாகமாக இப்புத்தகம் வெளிவந்துள்ளது.●

# நீதி, அமைதி, உடன்பிறந்த உறவின் முன்னுதாரணம் ROME CALL




அனைவரின் பொதுநலன், பொதுஇல்லமாகிய இப்பூமிப்பந்தைப் பாதுகாத்தல், கலாச்சாரத்தை ஊக்குவித்தல், நீதி, அமைதி, உடன்பிறந்த உணர்வு போன்றவற்றிற்கு முன்மாதிரியாக ROME CALL AI ETHICS ஒப்பந்தம் உள்ளது என்று எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த 10.01.2023 வத்திக்கானின் புனித கிளமெந்தினா அறையில் Renaissance அமைப்பினர் மற்றும் வாழ்விற்கான திருப்பீட பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய ROME CALL AI ETHICS ஒப்பந்தம் குறித்த நிகழ்வின்போது இவ்வாறு கூறினார். 2020 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட இவ்வொப்பந்தம் ஆபிரகாம் வாரிசுகளான கிறிஸ்தவம், யூதம், இஸ்லாமியம் போன்றவற்றிற்கு இடையே இணக்கத்தையும் ஈடுபாட்டையும் வளர்த்துள்ளதாகவும், உலகில் நீதி, அமைதிக்கான பணியில் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி, உடன்பிறந்த உறவு போன்றவற்றை வெளிப்படுத்துவதில் அனைவருக்கும் முன்மாதிரியாக திகழ்கின்றது என்றும் கூறினார் திருத்தந்தை.

அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும், தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வில் நன்னெறியுடன் கூடிய செயற்கை நுண்ணறிவு அதிகரித்து வருகிறது எனவும், உலகத்தையும் நம்மையும் நாம் எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் இவ்வறிவு செயல்படுத்தப்படுகின்றது எனவும் திருத்தந்தை கூறினார்.

உண்மையில், டிஜிட்டல் உலகின் உருமாற்றங்களின் ஆழம் மற்றும் வேகம் எதிர்பாராத சிக்கல்களை எழுப்பி, தனிப்பட்ட மற்றும் கூட்டு நெறிமுறைகளில் புதிய நிபந்தனைகளை விதிக்கின்ற நிலையிலும், ROME CALL அமைப்பின் இணைப்புக்கள் டிஜிட்டல் மானுடவியலை மேம்படுத்துவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாகும் எனவும் குறிப்பிட்டார் திருத்தந்தை●

# கருணையுடன் நம்மை மீட்கும் கடவுளின் அன்பின் நீதி



இயேசு தான் பெற்ற திருமுழுக்கின் வழியாக உலகிற்குக் கொண்டு வர வேண்டிய நீதியை வெளிப்படுத்துகின்றார் எனவும், கடவுளின் நீதி தண்டிக்கும் நீதியல்ல மாறாக கருணையுடன் நம்மை மீட்கும் அன்பின் நீதி எனவும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவைப் போல நாம் ஒருவர் மற்றவரது சுமைகளைப் பகிரவேண்டும் எனவும், கருணையுடன் ஒருவர் மற்றவருக்கு உதவ வேண்டும் எனவும் கூறினார். கடவுளுடைய நீதி, மறைநூல்களைக் கற்பிப்பது போல், மிகவும் பெரியது எனவும், அதன் நோக்கம் குற்றவாளிகளைத் தீர்ப்பிடுவதல்ல, கருணையுடன் அவர்களைப் பார்த்து அன்பினால் மீட்டு மறுபிறப்பளித்து நீதிமான்களாக்கும் அன்பின் நீதி என்றும் எடுத்துரைத்தார்.

மக்களை நல்லவர் கெட்டவர் என்று பிரித்து கடுமையாக தீர்ப்பளித்து கண்டனம் செய்பவர்களைப் போல் அல்லாமல் உடன் வாழ்பவர்களின் காயங்கள் மற்றும் பலவீனங்களை கருணையுடன் பகிர்ந்து கொள்பவர்களாக நாம் வாழ வேண்டும். பிரிப்பவர்களாக அல்ல பகிர்பவர்களாக இயேசுவைப் போல் ஒருவரை ஒருவர் கருணையுடன் பார்த்து உதவிகள் செய்து வாழவேண்டும் எனவும் கூறினார்.●

# திருஅவையின் மறைவல்லுநராகும் தகுதிபடைத்தவர் திருத்தந்தை பெனடிக்ட்



திறமையான தலைமைத்துவப் பண்பு, மென்மையான குணம், நம்பிக்கை, மற்றும் சிறந்த அறிவாற்றல் கொண்டு தனது வாழ்வின் இறுதிவரை திருஅவைக்காக உழைத்த திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள், விரைவில் திருஅவையின் மறைவல்லுநர் என்று அறிவிக்கப்படுவார் எனத் தான் நம்புவதகாகக் கூறியுள்ளார் கர்தினால் Angelo Bagnasco.

கடந்த 5.01.2023 அன்று மறைந்த திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் இறுதிச் சடங்கு நிகழ்வில் பங்கேற்ற பின்னர், வத்திக்கான் செய்திகளுக்கு அளித்த காணொளிப் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஜெனோவா உயர் மறைமாவட்டத்தின் பேராயரான கர்தினால் Angelo Bagnasco.

தனது மென்மையான குணத்தால் அனைவரையும் ஈர்த்த திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள், திருஅவையின் வளர்ச்சி மற்றும் நலனுக்காக, நம்பிக்கை, அறிவாற்றல், மென்மை, துணிவு கொண்டு பணியாற்றியவர் எனவும், அவர் ஆற்றிய பணிகளை உலகம் இனிவரும் காலங்களில் இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஏறத்தாழ 2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்த கூடிவந்தமை மக்கள் மத்தியில் அவர் பெற்றிருந்த அன்பையும், மரியாதையையும், உயர்வையும், உலகிற்கு எடுத்துரைப்பதாக அமைந்திருந்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். ●

# நாம் அனைவரும் அமைதிக்கான குரலாக செயல்படவேண்டும்



திருப்பீடத்திற்கான பல்வேறு நாடுகளின் தூதர்களைப் புத்தாண்டு வாழ்த்துக்களை வழங்கும் நோக்கத்தில் திருப்பீடத்தில் கடந்த 09.01.2023 அன்று காலையில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வுலகில் நாம் அனைவரும் அமைதிக்கான குரலாக செயல்படவேண்டும் என்ற அழைப்பை முன்வைத்தார்.

முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களின் மறைவுக்கு தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை வெளியிட்டுச் செய்தி அனுப்பியதுடன், உடல் அடக்கத்தின்போது திருப்பீடத்துடன் தங்கள் நெருக்கத்தை வெளியிட்ட அனைத்து நாடுகளுக்கும் தன் நன்றியையும் தன் உரையின் துவக்கத்தில் வெளியிட்டார். மூன்றாம் உலகப்போர் பல்வேறு நாடுகளில் துண்டு துண்டாக இடம்பெறும் இன்றைய காலக்கட்டத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும் பதட்ட நிலைகள் குறித்தும், அவைகளை ஆற்ற அனைத்துலக சமுதாயம் ஆற்றவேண்டிய கடமையையும் நினைவூட்டினார் திருத்தந்தை.

புனித திருத்தந்தை 23ஆம் ஜோன் தன் சுற்றுமடலில், அமைதிக்கான முக்கிய தூண்களாக உண்மை, நீதி, ஒருமைப்பாட்டுணர்வு, மற்றும் விடுதலை என்ற நான்கை வலியுறுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்டினார்.●

**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள்.
ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1500/=,
வெளிநாட்டுச்சந்தா ரூபா. 6000.
எம் மன்னா வாடிக்கையாளர்களே
உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப் பக்கம்

# ஆயர் தந்தையின் வாழ்க்கைப் பதிவுகள்



**பிறப்பு :** 20 வைகாசி 1948. யாழ்ப்பாணம்.
1952 -1953 கொம்பனித் தெரு பங்கு, கொழும்பு 14.
1955 கொட்டெகெனா பங்கு.

**தந்தை :** திரு. விசுவாசம் சேவியர் பஸ்ரியன் பெனாண்டோ.

**தாய் :** திருமதி. ஞானசொரூபி பெனாண்டோ.

**சகோதரர்கள் :** திரு.அன்ரன் பெனாண்டோ
அருட்பணி ஜோ. பெனாண்டோ (யாழ் மறைமாவட்டம்)
திரு.ஜோண் பெனாண்டோ
திருமதி.றீற்றா வாஸ்
அருட்சகோதரி டிலீற்றா அ.கா.
அருட்சகோதரி ஜோயெலா அ.கா.
திருமதி மிக்கலின் விக்ரோறியா.

**ஆரம்பக் கல்வி :** புனித ஆசிர்வாதப்பர் (பொனடிக்ற்)



கல்லூரி, கொழும்பு.

**சிறிய குருமட நுழைவு :** கொழும்பு புனித அலோசியஸ் குருமடம் 1965.

**மெய்யியல் கல்வி :** கண்டி தேசிய குருமடம் 1966

**இறையியல் :** இறையியல் இளங்கலைமாணிப் பட்டம், நற்செய்தி அறிவிப்புப் பல்கலைக் கழகம். உரோமாபுரி 1972 ஒழுக்க இறையியலின் சிறப்புப் பட்டம். உரோமாபுரி ஊர்பானியா பல்கலைக் கழகம். 1974

**குருத்துவ அருட்பொழிவு :** 1973 தை 06ந் திகதி திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால்



அருட்பணியாளராக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

**பணிகள்:** 1974 உதவிப் பங்குப் பணியாளர் - தலுகம.
1975 உதவிப் பங்குப் பணியாளர் - கன்வெல
1978 கண்டி தேசிய குருமடத்தில் குருத்துவ மாணவர்களை உருவாக்கும் பணி.
1981 அமெரிக்காவில் உயர்கல்வி.




1987 ஒழுக்க இறையியலில் முதுகலைமாணிப் பட்டம். மீண்டும் கண்டி தேசிய குருமடத்தில்.
1998 ஆவணி 1999புரட்டாசி. சிறப்பு விடுமுறை



(Sabbatical Leave)
1999 புரட்டாசி. கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் மறைப்பணி ஆய்வு மையத்தின் பொறுப்பாளராக நியமனம்.
ஆனி 2001 - ஐப்பசி 2002 பங்குப்பணியாளர் திலந்துவ, நீர்கொழும்பு. போலவல மறைக்கோட்ட முதல்வர்



ஐப்பசி 2002 - தை 2009 பங்குப் பணியாளர் மொறட்டுவ புனித செபஸ்தியார் ஆலயப் பங்கு, மொறட்டுவ மறைக்கோட்ட முதல்வர் (2009 மார்கழி வரை)



2004. மறைக்கல்வி மற்றும் குடும்ப அருட்பணிகளுக்கான ஆயரின் சிறப்புப் பணி முதல்வராக நியமனம்.

2006. கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் தெற்குப் பிராந்தியமான மொறட்டுவ, கழுத்துறை மறைக்கோட்டங்களுக்கான ஆயரின் சிறப்புப் பணி முதல்வராக நியமனம்.
2009 கழுத்துறை தகம் செவன குருமடத்தில் வதிவிடக் குருவாகப் பணி.
2010 கழுத்துறை திருச் சிலுவைக் கல்லூரியின் அதிபராக நியமனம்.
2010 வைகாசி: கொழும்பு உயர்




மறைமாவட்டத்தின் தமிழ் பேசும் மக்களுக்கான அருட்பணிகளுக்கான ஆயரின் சிறப்புப் பணி முதல்வராக நியமனம். கொழும்பு அக்குவினாஸ் இறையியல் கல்லூரியில் கற்பித்தல் பணி.



2011 கார்த்திகை 28: கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கான துணை ஆயராக நியமனம்.



2017 கார்த்திகை 22: திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் மன்னார் மறைமாவட்ட ஆயராக நியமனம் செய்யப்பட்டார்.
2017 மார்கழி 30, மன்னார் ஆயராகப் பொறுப்பேற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத புனிதர்கள்

## இறைவனின் அன்னை புனித கன்னி மரியாள்

### 01.01.2023



கி.பி.431இல் கூட்டப்பட்ட எபேசு நகர்ப் பொதுசங்கம் Theotokos என்ற கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்தி ''மரியா இறைவனின் தாய்'' என்று வரையறுத்துக் கூறியது. எபேசு சங்கம் கூடி இந்த முடிவை எடுக்கும் வரை மரியன்னையின் அன்பர்கள் ஆவளோடு வடிவாக வெளியில் காத்திருந்தனர். இது விசுவாச சத்தியமாக வரையறுக்கப்பட்டவுடன் கூட்டத்தினர் ஆர்ப்பரிப்புப் பேரொலியும் எழுப்பினர்.

இரவு நேரம் ஆகிவிட்டதால் சங்கத்தில் பங்கேற்ற ஆயர்களை அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குத் தீப்பந்தங்களுடனும், மேள தாளத்துடனும் ஊர்வலமாகக் கொண்டு போய்ச் சேர்த்தனர். இதனால் எபேசு நகரம் முழுவதும் ஒளிமயமாகக் காட்சியளித்தது. மரியா இவ்வாறு அன்று மாட்சிப்படுத்தப்பட்டார்.


பொதுசங்கத்தில் அலெக்சாண்டிரியா நகர் ஆயர் சிரில் தான் ஆணித்தரமாக நெஸ்டோரியஸின் தவறை சுட்டிக்காட்டி மரியா இறைவனின் தாய் என்று பறைசாற்றினார்.

1953ஆம் ஆண்டு Fulgens Corona என்ற சுற்றுமடலில் திருத்தந்தை 12ஆம் பத்திநாதர் "மரியா இறைவனின் தாய் என்பதால் மட்டுமே இறைவன் இவரை எல்லாவிதமான வரங்களாலும், அருளாசீராலும் அணி செய்யத் திருவுளமானார்" என்கிறார்.

2ஆம் வத்திக்கான் சங்கம் "திருச்சபை" என்ற தலைப்பில் மரியன்னை பற்றி கூறும்போது 12 தடவை "இறைவனின் தாய்" என்று குறிப்பிடுகின்றது. இயேசு மீட்பர் இறை தந்தையின் மீட்புத்திட்டத்தில் முதல் இடம் பெற்றிருந்தது உண்மையாயின் மரியா இறை திட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றிருந்தார் என்று கூறுவது முற்றிலும் பொருந்தும். ●

## புனித வனத்து அந்தோனியார்

### 17.01.2023



எகிப்து நாட்டைச் சார்ந்த இத் தவமுனிவரே கிறிஸ்தவத் துறவு வாழ்வுக்கு வித்திட்டவர். பெற்றோரை இழந்த நிலையில் இவர் 18 வயதில் தேவ அழைத்தலை உணர்ந்தார். இவருக்கு உரிமைச் சொத்தாக இருந்த ஒரு தோட்டத்தையும் துறந்துவிட்டு இயேசுவைப் பின்செல்ல உதவியாக இருந்தது என்ன தெரியுமா? ''இயேசுவின் திருதூதர்கள் அனைத்தையும் துறந்தபின் அவரைப் பின் சென்றார்கள் என்ற சொற்களே" (மத் 19:21) தம் சகோதரிக்கு மட்டும் ஒரு சிறுதொகையைக் கொடுத்துவிட்டு ஏஞ்சியதை ஏழைகளுக்கு ஈந்தார். பின் துறவற வாழ்வை மேற்கொண்டார். தம் ஊருக்கு அருகிலேயே கடும் உழைப்பு மறைநூலை ஊன்றிப் படித்தல், செபம் இவற்றில் நாள்தோறும் நேரத்தைச் செலவிட்டார். நாளடைவில் ஊரைவிட்டு மிகத் தொலைவிலுள்ள இடத்தைச் தேடிச் சென்றார். அங்கு புனித அத்தனாசியாரின் நண்பரானார். நாளடைவில் பலரும் இவரை அணுகவே ஆங்காங்கே குழுக்களாகத் துறவு வாழ்வை மேற்கொண்டனர். அவ்வப்போது அலெக்சாண்டியா நகருக்குச் சென்று அங்கு வேதகலகத்தில் சாவை எதிர்நோக்கி வாழ்ந்த மறைசாட்சிகளை விசுவாச சத்தியத்தில் உறுதிப்படுத்தினார். புனித அத்தனாசியார் இவரது துறவு வாழ்வைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இந்தக் குறிப்புகளின் பயனாகக் பலரும் பாலை நிலத்திற்கும் காடுகளுக்கும் சென்று வாழ்நாளெல்லாம் தப செப வாழ்வு வாழ்ந்து இறைவனடி சென்றனர். "இவ்வுலக வாழ்வு எத்துணை மின்னல் வேகத்தில் தோன்றி மறைகிறது. ஆனால் நித்தியம் நிலையான பேரின்பம் என்பது எத்துணை மேலானது என்று தியானிப்பது நிறையப் பலன் தருகிறது" என்று இவர் கொடுத்து வந்த மறையுரை புனித அகுஸ்தீனாரை மிகவும் கவர்ந்திழுத்தது. இதை அகஸ்டின் தமது "வெளியீடு" என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இவர் தமது 105 ஆவது வயதில் செங்கடலுக்கருகில் கி.பி.356ஆம் ஆண்டு கோல்சீம் குன்றில் இறைவனடி சேர்ந்தார் ●

## புனித செபஸ்தியார்

### 20.01.2023



இவர் பிரான்ஸ் நாட்டினர். இத்தாலி நாட்டில் கல்விப் பயிற்சி பெற்றார். இவரது காலத்தில் கிறிஸ்தவர்கள் வதைக்கப்பட்டனர், கொல்லப்பட்டனர். இத்தகைய சூழ்நிலையிருந்த கிறிஸ்தவர்களுக்கு இவர் பரிவிரக்கம் காட்டினார். ஊக்கம் அளித்தார். இதற்காகவே படையில் சேர்ந்தார். தமது திறமையால் படையில் பதவி உயர்வு பெற்றார். இக்காலத்தில் வேதத்திற்காகச் சிறைப்பட்டுக் கிடந்த மார்க்கஸ், மார்சலீனஸ் என்ற இருவரும் தம் பெற்றோரின் தூண்டுதலால் வேதத்தை மறுதலிக்ககூடும் என்ற சூழ்நிலையை நம் புனிதர் உணர்ந்தார். உடனே இவர் அவ்விருவரையும் அணுகி விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார். இதன் காரணமாக அவர்கள் தங்கள் குருதியைச் சிந்தும் அளவுக்கு விசுவாசத்தில் நிலைத்திருந்தார்கள். இத்தகைய தொண்டுகளைப் பற்றிக் கேள்வியுற்ற மன்னன் இவரை ஒரு மரத்தில் கட்டி அம்புகளால் எய்து கொல்லக் கட்டளையிட்டான். இவ் வேதனைக்குக் பின் அவர் இறந்திருப்பாரென விட்டுச் சென்றனர். இறை அருளால் இவர் உயிர் பெற்றார். பிறகு அரசனை மீண்டும் அணுகினார். கிறிஸ்தவர்களை வதைக்கக் கூடாதென கூறினார். அப்போது மன்னன் இவரைத் தடியால் அடித்துக் கொல்லக் கட்டளையிட்டான். இவ்வாறு அவர் கிறிஸ்துவுக்குத் தம் குருதியால் சான்று பகர்ந்து உயிர் நீத்தார். ●

## புனித அக்னெஸ்

### 21.01.2023




இவர் உரோமையில் பட்ரீசியம் எனப்பட்ட உயர்ந்த குலத்தில் தோன்றியவர். 12 வயதிலேயே தம் கன்னிமையை இறைவனுக்குக் கையளித்தார்.

இவர் அழகான தோற்றமுடையவர். பணம் படைத்த பலரும் இவரை மணந்துக்கொள்ள முயன்றனர். "எனது கன்னிமை இறைவனுக்கே" என்று கூறினார். இதனைக் கேட்டுச் சினம் அடைந்தவர்கள் இவரைக் கிறிஸ்தவள் என்று குற்றம் சாட்டினார்கள். மறையை மறுதலிக்கும்படி வற்புறுத்தப்பட்டார். தம் விசுவாசத்தில் வேரூன்றியிருந்தமையால் கண்முன் நெருப்பு மூட்டப்பட்டு அதை அவரிடம் காட்டி மிராட்டியபோது அவர் அஞ்சவில்லை. பொய் தெய்வங்களுக்குத் தூபங்காட்டப் பணிக்கப்பட்டபோது தம்மேல் சிலுவை வரைந்து கொண்டாரேயன்றி விசுவாசத்தை மறுதலிக்கவில்லை. பின்னர் ஒரு விலைமகளின் வீட்டில் விடப்பட்டார். அங்கு தீய இளைஞர் பலர் அவரை அணுக முயன்றும் அவர்களால் முடியாமற் போயிற்று அவர்களில் ஒருவன் மின்னல் போன்ற ஓர் ஒளியால் தாக்கப்பட்டு பார்வையிழந்து கீழே விழுந்தான். புனிதவதி உருக்கமாக மன்றாடியதால் அவன் மீண்டும் பார்வை பெற்றான். இறுதியில் அவர் தலை வெட்டப்பட்டு மறைசாட்சியாகக் குருதி சிந்தி வானகப் பரிசைப் பெற்றுக்கொண்டார். ●

## புனித தோமஸ் அக்குவினாஸ்

### 28.01.2023




இவரே கத்தோலிக்க பள்ளிகளின் பாதுகாவலர். இவர் எப்படி வாழ்ந்தார் என்பதை இவரது சாவு படுக்கையில் இவருக்குத் திவ்ய நற்கருணை கொண்டுவந்த நேரத்தில் இவர் சொன்னவற்றிருந்து புரிந்து கொள்ளலாம். "எனது ஆன்மாவை மீட்க வந்த விலைமதிப்பில்லாத செல்வமாகிய இயேசுவே உம்மை நான் வணங்குகின்றேன். என் படிப்புகள் கண்விழிப்புகள் உழைப்பு அனைத்துமே உம்மீது கொண்ட அன்பினால் தூண்டப்பட்டன. இவருக்கு ஏறத்தாழ 49 வயது நடக்கும் போது லயன்ஸ் 2ஆவது பொதுச்சங்கத்தில் பங்குபெற சென்றார். செல்லும் வழியில் உயிர் நீத்தார்.


இவரது வாழ்நாளெல்லாம் செபம் படிப்பு ஆகிய சூழலில் அமைத்திருந்தது. இவர் துறவறத்தை நாடிய பொழுது குடும்பத்தினர் அனைவரிடம் இருந்தும் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. எதிர்ப்பை எல்லாம் தாங்கிக் கொண்டு புனித டொமினிக் துறவற சபையில் சேர்ந்தார். இவர் எழுதிய ஏராளமான நூல்கள் நம்மை வியப்புக்கு உள்ளாக்குகின்றன.

அவை எல்லாக்காலத்திற்கும் எந்தளவு பொருந்தும் என்று தெரிகிறது. இவரது காலம் வரை திருச்சபையில் பல மறைவல்லுநர்கள் தோன்றியிருப்பினும் இவரை மட்டுமே 2வது வத்திக்கான் சங்கம் குருத்துவக் கல்விக்கும் கிறிஸ்தவப் பல்கலைக்கழகப் படிப்புக்கும் வழிகாட்டி என்று குறிப்பிடுகிறது. திவ்ய நற்கருணை ஆசீர்வாதத்திற்கு முன் பாடப்படும் மாண்புயர்...." என்ற பாடலைப் பாடுகிறோமே அதிலிருந்து புரிந்துகொள்ளலாம். இந்தப் பாடலைத் தொகுத்தவர் புனித தோமஸ் அக்குவினாஸ்தான்.

"இந்த அருட்சாதனத்தைத் தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்'' என்பதிலிருந்தும் "அறிய இயலாக் குறையை நீக்க விசுவாசத்தின் உதவி பெறுக" என்ற சொற்றொடரிலிருந்தும் இவர் நற்கருணை நாதரிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தி, வணக்கம், பற்றுதல், விசுவாசம் அனைத்தும் புலனாகின்றன. 1266ஆம் ஆண்டு மீண்டும் பாரிஸ் நகருக்கு அனுப்பப்பட்டார். 9ஆம் லூயி மன்னன் இவரிடம் பெரிய மதிப்பும் வணக்கமும் வைத்திருந்தார். ●

## புனித திமோத்தி

### 26.01.2023




திமோத்தேயுவின் தந்தை புறஇனத்தவராகவும், தாய் யூத குலத்தைச் சார்ந்தவராகவும் இருந்தார்கள்.

புனித பவுல் பல இடங்களிலும் சென்று போதித்தபோது திமோத்தேயுவும் அவர்தம் தாயாரும் பாட்டியும் அவரிடத்தில் திருமுழுக்குப் பெற்றார்கள். திமோத்தேயுவின் பக்தியையும் அறிவினையும் அறிந்த திருதூதர்கள் அவரைத் தம் துணைவராகத் தெரிந்துக்கொண்டனர்.

புனித பவுல் அவரைத் திருச்சபைக்கான வேதனைகளை அனுபவிக்கும் கிறிஸ்தவர்-களிடம் அனுப்புவார். சில வேளைகளில் வேதத்தில் தத்தளிக்கும் விசுவாசிகளிடம் அனுப்புவார்.

பவுலின் வழியிலேயே திமோத்தேயு நடந்துக்கொண்டபடியால் எபேசு நகருக்கு ஆயராக நியமனம் பெற்றார். பவுல் சிறையில் வைக்கப்பட்ட பொழுது திமோத்தேயுவுக்கு மெய்மறையைப் பற்றி இரு திருமடல்கள் எழுதி அனுப்பினார்.

திமோத்தேயு எண்ணற்ற புண்ணியங்களையும் தவ செயல்களையும் செய்து வேதத்துக்காக தடிகளால் அடிக்கப்பட்டு வேதசாட்சி முடிபெற்றார். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# இலங்கையின் முதலாவது புனிதர் புனித யோசேவ் வாஸ் அடிகளார்

கடந்த 2015 ஜனவரி 14ல் எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்ட திருப்பயணத்தின் போது காலி முகத்திடலில் இடம்பெற்ற திருப்பலியில் சுமார் 4 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் முன்னிலையில் யோசவ் வாஸ் அடிகளாருக்குப் புனிதர்பட்டம் வழங்கியதனையும் தொடர்ந்து மருதமடு அன்னையின் திருப்பதிக்கு யாத்திரையாக வருகை தந்தமையையும் நினைவுகூர்ந்து இக்கட்டுரை எழுதப்பட்டது.

இலங்கை நாட்டில் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் கத்தோலிக்க விசுவாசத்தைக் கட்டியெழுப்ப வேறுபாடு எதுவுமின்றி, அரும்பணியாற்றி இலங்கையின் திருத்தூதர் என்றழைக்கப்படும் புனித யோசேவ் வாஸ் அடிகளாரை நாம் அன்னையாம் திருஅவையோடு இணைந்து நினைவுகூருகின்றோம்.

கடந்த 21 ஏப்ரல் 1631ல், இந்தியாவின் கோவா எனப்படும் இடத்தில் பிறந்த யோசேவ் வாஸ் அடிகளார், கடந்த 1685ம் ஆண்டில் கோவாவின் எனப்படும் துறவற சபையில் இணைந்து, 1687ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடல் வழியாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். இவர் யோசேவ் வாஸ் முனீந்திரர் எனவும் இலங்கைக் கத்தோலிக்க மக்களால் அழைக்கப்படுகிறார்.

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியில் கொல்வினிசத்தைப் பரப்பிக் கத்தோலிக்கரையும், குருமாரையும் கொலை செய்து இலங்கையில் கத்தோலிக்க நம்பிக்கை ஒல்லாந்தரால் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த காலத்தில், இப்புனிதர் இலங்கைக் கத்தோலிக்கருக்கு சேவை செய்ய வந்த கத்தோலிக்க குருவானவர் ஆவார்.

பிச்சைக்கார வேடத்தில் இலங்கை வந்த அடிகளாருக்கு, ஆரம்பத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள சில்லாலையூர் மக்கள் புகலிடம் வழங்கியதால், சில்லாலையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் மக்களுக்கு தனது அளப்பரிய சேவையை ஆரம்பத்தில் வழங்கினார்.

கால்நடையாக மாறுவேடத்தில் 24 ஆண்டுகளாக வன்னி, புத்தளம், மன்னார், பூநகரி ஆகிய இடங்களுக்கும் சென்று கத்தோலிக்க மதப்பிரசாரம் செய்தாரென அடிகளாரின் வரலாறு தெரிவிக்கின்றது. பிற்காலத்தில் இவர் கண்டி இராச்சியத்தில் தங்கியிருந்து இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையை மீளமைத்தாரென இவரது வரலாறு மேலும் கூறுகின்றது.



1692ல் கண்டிக்குச் சென்ற யோசேவ் வாஸ் அடிகளார கண்டிப் பகுதியில் கத்தோலிக்க மதத்தை மீளத் ஸ்தாபிக்கப் பெருமுயற்சி செய்ததால், இரண்டாண்டுகள் சிறையிலும் இருக்க நேரிட்டது. கண்டியிலிருந்தே தனது சேவையைத் தொடர்ந்த யோசேவ் வாஸ் அடிகள் 1696ல் இலங்கையின் Vicar-General பதவியைப் பெற்றார்.

1710ம் ஆண்டில் மட்டக்களப்பு தாண்டவன்வெளியில் (தற்போதைய புனித வியாகுலமாதா ஆலய வளாகத்தில்) ஒரு சிறு ஓலைக் கோயில் கட்டித் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது, காட்டிக் கொடுக்கப்பட்டு, மரத்தில் கட்டி அடிக்கப்பட்டார். 1711ம் ஆண்டில் கண்டியில் காலமானார்.

தமிழிலும், சிங்களத்திலும் திருவிவிலியத்தை மொழிபெயர்த்ததோடு, இன,மொழி, வேறுபாடுகளைக் களைந்து கடவுள் நம்பிக்கையில் மக்கள் வளர வேண்டும் என்பது அவருடைய குறிக்கோளாக இருந்ததால் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் மக்கள் கடவுளை வழிபடுவதற்கான நூல்களை எழுதியுள்ளார்.

மடுத்திருப்பதியில் அமைந்துள்ள அன்னை மரியாவின் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு யோசேவ் வாஸ் அடிகளார் துணைபுரிந்தார். மேலும், இலங்கையில் கிறிஸ்தவ நம்பிக்கையை பரப்புகையில், அந்தந்த மக்களின் பண்பாட்டுப் பாணிகளை மதிக்கவேண்டும். என்பதிலும் அவர் கருத்தாயிருந்ததா என அறியக்கூடியதாகவுள்ளது.

இன்று இலங்கையின் ''அப்போஸ்தலர்'' என நாம் பெருமையோடு அழைக்கும் யோசவ் வாஸ் அடிகளார், 1995 ஜனவரி 20ல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கொழும்பு வந்திருந்த போது ஜனவரி 21ல் காலி முகத்திடலில் இடம்பெற்ற திருச்சடங்கில் அருளாளர் பட்டம் பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

திருத்தந்தை பிரான்சிஸ் கடந்த 2015 ஜனவரி 14ல் இலங்கைக்கு மேற்கொண்ட திருப்பயணத்தின் போது காலி முகத்திடலில் இடம்பெற்ற திருப்பலியில் சுமார் 4 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் முன்னிலையில் யோசேவ் வாஸ் அடிகளாருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார்.

புனிதர் பட்டமளிப்புக்கான பாரம்பரியத்தின்படி வழக்கமாகத் தேவைப்படும் இரண்டாம் புதுமையினை வேண்டாம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் யோசேவ் வாஸ் அடிகளாருக்கு விதிவிலக்கு அளித்திருந்தார் என்பது இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் முதலாவது புனிதர் பட்டம் பெறுபவர் என்ற பெருமை இப்புனிதருக்கு உண்டு.

# அன்னை மரியா தாழ்ச்சியை ஆடையாக கொண்டவள்

அன்னை மரியாள் தாழ்ச்சியின் மணிமகுடம்! அவர் எவ்வாறு தன் வாழ்க்கையில் தாழ்ச்சி, எளிமை, பொறுமை, நேசித்தல், மன்னித்தல், குறைகளை ஏற்றல், துன்பங்களை ஏற்றல் எனும் அடையாளங்களை கொண்டு வாழ்ந்தாள் என்பதை இங்கே சற்று அறிவோம். தாழ்ச்சி எனும் பொருளில் பொதிந்துள்ள அடையாளங்களை சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

**பொறுமை:**

நாம் எந்த அளவு தாழ்ச்சியைக் கொண்டுள்ளோமோ அதே அளவு பொறுமையும் கொண்டுள்ளவர்களாக திகழ்கின்றோம். காரணம் சகிப்பு தன்மை இங்கே மேலோங்கும். கோபம் அறவே குறையும். கோபத்தினால் எதையும் சாதிக்க இயலாது. பொறுமையினால் எதையும் முடியும்.

**எளிமை:**

நம் பேச்சிலும், சொல்லிலும், செயலிலும் வாழ்க்கை முறையிலும் எளிமையை கடைபிடித்தால் இங்கே தாழ்ச்சி மேலோங்கி நிற்கும். எளிமையானது அதிகார போக்கினை அறவே அகற்றுகிறது. ஏழை எளியோரை நம்மவராக ஏற்கின்றது.

**அன்பு செயல்:**

தான் சொல்வது, செய்வது தான் சரி என்று எண்ணுபவர்கள் புத்திசாலிகளாக இருக்கமுடியாது. அடுத்தவர்களை அன்பு செய்து அவர்களது நல்ல எண்ணங்களை ஏற்று செயலாக்கம் செய்வதே தாழ்ச்சியின் அடையாளமாகும்.

**மன்னித்தல்:**

உறவுகளில் பிளவுகள் ஏற்படுதல் இயல்பு. அந்த உறவுகள் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் உறவு வளர வேண்டும். இவ்வாறு நல்ல எண்ணங்களை கொண்டுள்ளவர்கள் இருப்பின் அவர்கள் தாழ்ச்சியில் வளர வேண்டியவர்கள் என்பதை உணர்ந்திடுவீர்.

**குறைகளை ஏற்றுக் கொள்ளுதல்:**

நாம் சில நேரங்களில் தவறுகளை நியாயப்படுத்துகின்றோம். பிறர் குறைகளை சுட்டிக் காட்டுகின்றோம். ஆனால் நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபரும் நமக்கு ஆசிரியராக அமையமுடியும். நாம் சந்திக்கும் ஒவ்வொரு நிகழ்வும் நமக்கு பாடமாக அமையும். எனவே குறைகளை ஏற்றுக்கொள்ளும் போது இங்கே தாழ்ச்சி மேலே தங்கி நிற்கின்றது. வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் தாழ்ச்சி தேவையாகும்.

**துன்பங்களை ஏற்றுக் கொள்ளுதல்:**

நம் வாழ்வில் துன்பம் ஓர் அம்சமாகும். தோல்விகள், இழப்புகள் ஏதோ ஒரு வழியில் பலன் தரலாம். தராமல் போகலாம். ஆனால் மாற்றமுடியாத துன்பங்களை ஏற்றுக் கொள்வதே சரி! கடந்த காலம் எதிர்காலங்களை சிந்திக்காமல் நிகழ் காலத்தை சிறப்பாக செய்வதே தாழ்ச்சியின் அடையாளமாகும்.

மேற்கண்ட கருப்பொருயை நம் வாழ்வாக்கி கொள்ளும்போது மாமரியின் தாழ்ச்சியை நாம் ஆடையாக அணிந்துக் கொள்கின்றோம். எனவே தரணியை தாழ்ச்சி ஆளட்டும். ஒவ்வொருவரின் இதயங்களை ஆட்கொள்ளட்டும். தாழ்ச்சியின் அடையாளங்களை ஆடையாக அணிந்துக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் குருத்துவ அர்ப்பணத்தின் பொன்விழா காணும் நிகழ்வுப் புகைப்படங்கள்



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு கூருகின்றோம்..!

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 13 | | 13 |
| 12 | | 12 |
| 1938 | | 2022 |



**அமரர். காணிக்கைநாதன் பவியோலா றெவ்வல்**

1ம் வட்டாரம், வங்காலை, மன்னார்.

பத்து திங்கள் உதரம் சுமந்து எங்களை சீராட்டி
பாராட்டி ஊர்போற்ற வாழ்வு தந்தாயே!
உன் கண்களால் தானே இந்த உலகினை நாம் கண்டோம்
உலகே இருண்டதே எமக்கு! மார்கழி திங்கள் 13ம் நாளில்
உமக்கு அத்துணை பிடிப்போ மலரவும்.. உதிரவும்..
அன்பும், பண்பும், அருமையும், பெருமையும்
நாம் வாழ்வாங்கு வாழ - நீர்
காட்டிய வாழ்வில் தடம் பதிப்போம் உம் நினைவுகளுடன்!
இறைவனின் தூய சந்நிதியில் நீங்கள் அமைதியில்
இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரி,
உற்றார், உறவினர்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 22 | | 16 |
| 01 | | 12 |
| 1944 | | 2022 |



**அமரர். சவிரிமுத்து இருதயதாசன்**

ப.க.கொ.மேற்கு, மன்னார்

காலனவன் வரைந்திட்ட கோலமிதுவோ
படைத்தவன் போட்டு வைத்த கணக்கிதுவோ
கண்மூடி திறக்கும் முன்போ காற்றோடு
கலந்து விட்டாய்
சிரித்திடும் உம் முகமும் பணிவான
உம் குணமும் கனிவான உம் பேச்சும்
இனிக் காண்பது எப்போது
பதறுகிறோம் உம் பிரிவால் பாரினில் யார்
எம்மை தேற்றிடுவார்.
உம் ஆன்மா நித்திய அமைதிபெற
இரஞ்சுகின்றோம் இறைவனை
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 30 | | 25 |
| 09 | | 01 |
| 1942 | | 2022 |



**அமரர்**
**ம. வென்சஸ்லாஸ் பீரிஸ்**
(கட்டிடக் கலைஞர்)

7ம் வட்டாரம், வங்காலை

கண்படா கடின உழைப்புடனும்
புண்படா இனிய பேச்சுடனும்
கறைபடா தூய மனத்துடனும்
குறைபடா செல்வச் செழிப்புடனும்
மறைபடா ஆன்மீகச் சேவையுடனும்
பொய்படா குடும்பத் தலைவராயும்
கைபடா நற்சீலராகவும் வாழ்ந்த எம் தந்தையே!
வல்ல இறைவன் இல்லத்தில்
தொல்லையின்றி வாழ
நல்ல தேவனை நாளும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 | | 21 |
| 03 | | 01 |
| 1951 | | 2021 |




**அமரர்**
**நீக்கிலாப்பிள்ளை பொன்சேகா**
முர்வீதி, மன்னார்

"நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்"
(லூக் 23:43)

அன்பின் இருப்பிடமாம் பண்பின் உறைவிடமாம் பாசத்தின் மறுபாம்
வாழ்ந்த எம் தந்தையே உடலால் எம்மைப் பிரிந்தாலும்
காலங்கள் கடந்தாலும் உள்ளத்தாலும் உணர்வுகளாலும் என்றுமே
எம்முடன் வாழ்கின்றீர்கள் அனைவரையும் அன்பு செய்தும் அனைவராலும்
அன்பு செய்யப்பட்டும் எம்முடன் வாழ்ந்தீர்கள் ஏழ்மையிலும் ஏழைக்கு
இரங்கி இறைவழியிலும் இறைபக்தியிலும் வாழ வழிகாட்டி சென்றீர்
தியாகத் தந்தையாக எம் நல்வாழ்வுக்காய் உம் வாழ்க்கையில்
பல தியாகங்களை புரிந்தீர் பாசத்துடன் வளர்த்து விட்டேன் என்ற
மனநிறைவில் எம்மை விட்டுச் சென்றீர்களோ கண்முன்னே வாழ்ந்த
காலமெல்லாம் கனவாகி போனாலும் உயிர் உள்ள காலம் வரை
உம் நினைவுகளுடன் வாழ்வோம்!
"உங்களின் ஆன்மா என்றும் இறைவனில் மகிழ்ந்திருக்கப்
பிரார்த்திக்கின்றோம்"

பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 08 | | 08 |
| 03 | | 01 |
| 1940 | | 2022 |

**அமரர்.**
**கலைத்தவசி செ. செபமாலை**
**(குழந்தை)**

இளைப்பாறிய அதிபர்
முருங்கன்

முத்தமிழ் போற்றிய முதுபெருங் கலைமணியே
முகவரி தந்தநல் முருங்கனின் தவசியே
வித்துவக் கவிநயம் விஞ்சிடும் சொல்நயம்
வெந்திட மனங்களும் வேதனை கொண்டதே
பித்தனே நாடகம் பெற்றதெம் வேந்தனே
பிரிந்திட எந்தையை பெருந்துயர் வந்ததே
அத்தனை வேண்டினோம் அல்லல்கள் தீர்க்கவே
ஆண்டவன் அடியினில் அமைதியும் பெறுகவே

என்றும் நினைவில்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 21 | | 20 |
| 06 | | 01 |
| 1953 | | 2021 |



**திருமதி.**
**சவிரியம்மா மரியதாஸ் (மகேஸ்)**

ஆட்காட்டிவெளி

"ஜீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"
எம்மோடு வாழ்ந்து எம்மைக் காத்து,
எமக்கெல்லாம் ஒளியாகி வழியாகி எங்கள்
இதயங்களில் என்றென்றும் வாழ்கின்றீர்கள்
நீங்காத நினைவுகளுடன்,
இறை யேசுவின் இன்ப சந்நிதானத்தில்
நீங்கள் இளைப்பாறப் பிரார்த்திக்கிறோம்.
"யேசுவின் இரத்தம் ஜெயம்"

பிரிவின் துயரில்
அன்புக் கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 13 | | 24 |
| 07 | | 01 |
| 1981 | | 2018 |



**மரியாம்பிள்ளை செபஸ்ரியான்**
**(நிக்சன்)**

இசைமாலைத்தாழ்வு

எம் வழிநீரின் ஈரம் காயும் முன்பே நான்காண்டு நிறைந்து
விட்டதே தம்பி காலவன் விரித்த வலையில் கண் இமைப்பொழுதில்
மாட்டிக்கொண்டாயே! இது மனித சதியா அல்லது விதியா?
விடை தெரியாமல் ஏங்குகின்றோம். ஆசைகள் எத்தனையோ
உம் மனதில் எல்லாம் மறைந்து போனதோ. ஒன்றே ஒன்றென,
எமக்குதவிட நீ இருந்தாய். ஆனால் உன் பொறுப்பை
என் தோளில் சுமத்திவிட்டு எம்மை மீளாத் துயரில் இட்டுவிட்டு
எங்கோ சென்று விட்டாய். உன் பிரிவால் நாம் படும் துயரை
வடிக்க வார்த்தைகள் இல்லையடா. எங்கே பார்த்தாலும் உன்முகம்.
பார்த்தால் ஏமாற்றமே. விதியின் விபரீத விளையாட்டால்
வித்தாகிப் போனவனே, எம் துயரைப் போக்க என்ன
செய்யப் போகின்றாய்? ஆண்டவன் இல்லத்தில் அமைதியாய்
இளைப்பாற நித்தமும் இறையருள் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அம்மா, ஐயா, அக்காமார், உறவுகள், நட்புக்கள்,

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1962 | | 2017 |
| 01 | | 01 |
| 23 | | 02 |



**அமரர்**
**சீமான்பிள்ளை மரியநாயகம்**


ஒலிமடு, நானாட்டான்

அன்புள்ள அப்பாவே எங்கு நீங்க போனீங்க!
நாட்கள் பல ஆயிடிச்சு எப்பதான் வருவீங்க!
நான் நேசிச்ச முதல் உறவு நீங்கதானே அப்பா!
நான் சுவாசிச்ச முதல் கவிதை நீங்க தானே அப்பா!
உங்க கை பிடிச்சு நா நடந்த பாதையில என்னை தேற்ற
எனக்கொரு நாதியில்ல காலம் பல ஆனாலும்
உம் முகம் மறைந்திடுமோ அப்பா!
கதறி நான் அழுதாலும் கண்ணீர் தீர்ந்திடுமோ அப்பா!
நடந்தது எல்லாம் மறைந்திடுமோ அப்பா!
கடந்தது எல்லாம் கரைந்திடுமோ அப்பா!
நீங்கள் காட்டிய பாதையில் நடக்கிறோம் அப்பா!
சமாதானத்தில் இளைப்பாறுங்கள் அப்பா!

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி மற்றும் பிள்ளைகள்
ஒலிமடு, நானாட்டான்.

# முன்னாள் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பரின் இறுதி பயணம்
















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறப்புக் கட்டுரை

# இயேசுவின் பிறப்பு – மகிழ்ச்சியும் சமாதானமும்

மகிழ்ச்சியின் நாயகனாகிய இயேசு கிறிஸ்து 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தீனத்தில் உள்ள பெத்லகேம் என்ற சிற்றூரில் மாட்டுத்தொழுவத்தில், ஏழ்மையான சூழலில் பிறந்தார். யோசேப்புக்கு மனைவியாக நியமிக்கப்பட்ட மரியாளின் வயிற்றில் தூயஆவியால் நிரப்பப்பட்டுக் கன்னியின் மகனாய் இயேசு பிறந்தார். எனவே இயேசு கடவுளின் குமாரனாய் இவ்வுலகில் வந்தார். இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வந்தது, தந்தையின் அன்பு என்பதும் (யோவான் 3:16) அதேவேளையில் இவ்வுலகம் பாவம் என்ற அநீதியான அமைப்பில் நிறைந்திருந்ததை முழுவதும் அகற்றி, மனுகுலம் பாவத்திலிருந்து முழு விடுதலை பெறவேண்டும் என்பதே இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நோக்கமாக இருந்தது.



தனிமனித விடுதலை என்பதே முழு விடுதலையை நோக்கியது என்பதை அறியும் வண்ணம் இறைத்தூதர், இயேசு என்ற பெயருக்குப் பாவத்திலிருந்து விடுதலை அளிப்பவர். அதாவது இரட்சகர் என்று கூறினார் (மத்தேயு 1:21). ஆகவே, இயேசு கிறிஸ்து உலக இரட்சகர் என்பதையும் இவ்வுலகை மீட்க வந்தவர் இயேசு என்பதையும் அறிய முடிகிறது.

இயேசு கிறிஸ்து உலக இரட்சகர் என்ற நிலையில் அவர் அரண்மனையில் அலங்காரமாக ஆடம்பரமாகப் பிறக்காமல் மாட்டுத் தொழுவத்தில், ஏழ்மையின் கோலமாகத் தாழ்மையின் வடிவாகப் பிறந்தார். (பிலிப்பியர் 2:4-8) இயேசு பிறந்தார் என்ற செய்தி இவ்வுலகில் முதன்முதலாக ஆடுகளை வயல்வெளியில் மேய்த்துக் கொண்டிருந்த மேய்ப்பர்களுக்கு இறைத் தூதரால் அறிவிக்கப்பட்டது.

'அப்பொழுது குழந்தையை முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்' என்பதே செய்தியாகியது.

அதேவேளையில் வானத்தில் ஒரு நட்சத்திரம் தோன்றியதைக் கண்ட வானசாஸ்திரிகள், மேசியா அதாவது, இரட்சகர் பிறந்துள்ளார் என்பதை அறிந்து ஏரோதுவின் அரச மாளிகைக்குக் குழந்தையைக் காணச் சென்றனர். ஆனால் குழந்தை அங்கு இல்லை.

இயேசு மாட்டுத் தொழுவத்தில் பிறந்திருந்தார் என்பதை மேய்ப்பர்கள் மட்டுமே முதலாவது காண நேர்ந்தது. ஏழைகளுக்குக் காட்சியளிப்பவராய், ஏழ்மையின் கோலமாய், தாழ்மையின் வடிவில் இயேசு கிறிஸ்து பிறந்தார் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. இயேசுவின் தாழ்மை இன்று நம் அனைவரையும் ஆதிக்க, ஆடம்பர வாழ்விலிருந்து மாற்றம் பெற்று, அனைத்து ஏழை, எளிய மக்களோடு ஒன்றித்து வாழ அறைகூவல் விடுக்கிறது. இன்றைக்கும் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களோடு தங்களைப் பகிர்ந்தளித்து வாழும் போதும், அன்றாட வாழ்வில் தேவை உள்ளோருக்குப் பகிர்ந்து கொடுக்கும்போதும், உண்மையான தாழ்மை நிலை உருவாக வேண்டும். அதேவேளையில் அது அனுதின வாழ்வாக அமைய வேண்டும்.

இயேசு பிறந்தார் என்ற செய்தி மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது “உன்னதத்தில் கடவுளுக்கு மகிமை, பூமியிலே சமாதானம், மனிதர் மேல் பிரியம்" என்று கூறப்பட்டது. இந்தப் பிறப்பின் செய்தி நமக்கு கூறுவது என்னவென்றால் ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமை, ஆண் பெண், கருப்பு வெள்ளை, சத்திய வேறுபாடுகள் என்றும், இனம், மொழி என்ற நிலையில் வன்முறை கலாச்சாரங்கள் நிலவி வரும் சூழலில், அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழவும், ஒன்றாக, நிறைவாக, அனைத்தையும் பகிர்ந்து வாழவும் வேண்டும் என்பதே ஆகும்.

இன்றைக்குச் சமூக, அரசியல், பொருளாதார, ஏற்ற தாழ்வுகள் இவற்றைக் களைந்தெறிந்து அனைவரும் உண்மையான மகிழ்ச்சியோடு, சமாதானத்தோடு வாழ தாழ்மையின் கோலத்தில் பிறந்த இயேசு கிறிஸ்துவை உள்ளத்தில் ஏற்று வாழும்போது நிறைவான, முழுமையான வாழ்வு, அனைவருக்கும் நிலவும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. எனவே ஏழை, எளிய, மக்களின் வாழ்வில் அன்றாடம் மகிழ்ச்சியைக் காண ஆதிக்க, பணக்கார, முதலாளித்துவ நிலையிலிருந்து நம் எண்ணங்களை மாற்றி எளிய உள்ளத்தோடு, தாழ்மையின் பணிவோடு நம் அனைத்து உடைமைகளை, உரிமைகளைப் பிறருக்குப் பகிர்ந்து வாழும்போது தினமும் கிறிஸ்துமஸ் நாளாக அமையும்.

இப்படிப்பட்ட வாழ்வே இம்மண்ணில் நமக்கு முழுமையான மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் அனுதினமும் அருளச்செய்யும். அதன் மூலம் விண்ணுலகின் கடவுள் மகிமை பெறுகின்றவராக இருக்கிறார். அனைத்து மக்களும் நலமுடன் வாழ நம்மை எளிமையின் வாழ்வுக்குள் அர்ப்பணிப்போம். ஆசீர்வாதமும் நம் அனைவருடனும், என்றும் நிலைத்திருப்பதாக. கடவுள் அனைவரையும் இந்தக் கிறிஸ்துமஸ் காலங்களிலும், புதிய ஆண்டிலும் ஆசீர்வாதமாக வழி நடத்துவாராக... ஆமென்.

# கிறிஸ்துவின் பிறப்பு அன்றும்... இன்றும்...

2019 வருடங்களுக்கு முன்னர் பெத்லகேமில் மிக எளிமையாக இடம்பெற்ற குழந்தை இயேசுவின் பிறப்பு, இன்று உலகம் முழுவதும் இணைந்து கொண்டாடும் பெரு விழாவாக மாற்றம் பெற்றாலும், அந்த அதிசயம் மிக்க அற்புத நிகழ்வின் உண்மைத் தன்மையை நாம் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோமா? அல்லது, இறைமகன் இயேசுவின் பிறப்பு என்றால், என்ன என்பதனை மறந்து வாழ்கிறோமா? என்பது எனது பணிவான அபிப்பிராயமாகும்.

தெய்வத்திருமகன் பெத்லகேமில் எதற்குமே பெறுமதியில்லாத மாட்டுத்தொழுவத்தில் பிறந்ததால், இன்று பெத்லகேம் அகில உலகமும் போற்றும் ஒரு பரிசுத்த யாத்திரைத் தலமாகி நாமும் அத்திருத்தலத்திற்கு யாத்திரையும் சென்றிருக்கலாம். ஆயினும், ஆண்டவர் இயேசு எமது உள்ளமெனும் மாட்டுத் தொழுவத்தில் பிறந்திட நாம் இடம் ஒதுக்காவிட்டால், எமது யாத்திரை மட்டுமல்ல, நாங்களும் பெறுமதியற்ற ஈனப்பிறவிகளே என்பதனை உணருகிறோமா?

இஸ்ராயேல் மக்கள் பல்லாயிரம் வருடங்களான தமது அடிமைத்தனத்திலிருந்து மீட்க மெசியா பிறப்பாரென எதிர்பார்த்ததாகத் திருவிவிலியம் பல இடங்களில் தெரிவிக்கின்றது. இன்றும் அதே மனிதன் தனது இனத்தின் விடியலைத்தேடி சொந்த நாட்டிலேயே அகதியானது மட்டுமல்ல, புலம்பெயர்ந்தும் அகதியாக அலைவது வரலாறாகப் பதிவாகவில்லையா?

மார்கழி நள்ளிரவில் பிறந்த குழந்தை தீவனத்தொட்டியில் வளர்த்தப்பட இடையரும், ஞானிகளும் தெண்டனிட்டு வணங்கினர். கடைசி இரவு உணவில், “இது எனது உடல் வாங்கி உண்ணுங்கள்“ என்று தரப்படும் தீவனத் தொட்டியின் ஆன்மீக உணவில் தகுதியோடு பங்கெடுக்கிறோமா? அந்தத் திருஉடலை ஈரைந்து மாதம் சுமந்த “அருள் நிறைந்த பேழைக்கு மதிப்பளிக்கிறோமா? அல்லது, நற்கருணைப் பேழையில் வீற்றிருப்பவரை பக்தியோடு பணிந்து வணங்குகிறோமா? அன்றைய மனிதன் பயங்கர விலங்குகளிலிருந்து பாதுகாக்க ஆயுதங்களை உருவாக்கினான். இன்றைய மனிதன் கொடிய மிருகங்களை செல்லப் பிராணிகளாக்கி, தனது சொந்தச் சகோதரங்களையே கொன்றொழிக்கப் பல்வேறு ஆயுதங்களை உருவாக்கிப், பாவம் வந்து வீட்டு வாசலில் பாய்விரித்துப் படுத்திருக்க இடமளிக்கவில்லையா?

“உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” (லூக்கா 2:14) என்று வானதூதர்கள் பாடியது, உள அமைதி தொடங்கி உலக அமைதி வரைக்கும் என்பதாகும். அமைதியை உருவாக்குவதே கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி என்பதை நாம் உணர்ந்திருந்தால், குழு சேர்த்து, சதி செய்து குழிப் பறிக்கும் முயற்சிகள், பல்வேறு முரண்பாடுகள், போட்டி பொறாமைகள் எதற்காக?

மார்கழிக் கடுங்குளிரில், பிரசவ வலியில் மரியன்னை துடிதுடித்தும், சத்திரத்திலும் இடம்கொடாது கதவை மூடிய மனிதர்களாக நாம் இன்றும் வாழவில்லையா?

கொட்டும் மழையிலும், கொதிக்கும் வெய்யிலிலும், பனியின் குளிரிலும், பசியின் கொடுமையிலும் அபயம் தேடும் ஏழைகளின் உருவில் வரும் மரியன்னைகளுக்காக இதயக் கதவைத் திறப்போர் எத்தனை பேர்?

புனித நள்ளிரவில் மந்தைகளைப் பாதுகாக்க ஏழை இடையர் விழித்திருக்க, வரலாற்றை முன்னும் பின்னுமாகப் பிரித்த இறைமகன் இயேசு எமது வழிகாட்டும் விடிவெள்ளியாகப் பிறந்தார். ஆயினும், சொந்த உறவுகளையே பிரித்தாளும் மனிதனின் கொடூர உள்ளத்தில் இரக்கம், கருணை, பரிவு, பாசம் என்ற “மனிதநேய விடிவெள்ளி“ பிறந்துள்ளதா?

குழந்தை இயேசு, “உலகமெங்கும் சென்று என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடுங்கள்” என்று கூறவில்லை. மாறாக, தெருவோரப் பிச்சைக்காரரிலும், தனிமையில் வாடும் முதியவரிலும், கவனிப்பாரற்ற நோயாளியிலும், துன்பங்களோடும், வேதனைகளோடும் சிறைகளில் சித்திரவதைப்படுவோர் மத்தியிலும் இன்றும் பிறப்பதாகப் போதித்ததனை நாம் உணருகிறோமா?

குழந்தை இயேசு பிறந்ததும் கொல்லத் தேடிய ஏரோது, இரு வயதிற்குட்பட்ட அப்பாவிக் குழந்தைகளைக் கொலை செய்தான். வேண்டாக் கர்ப்பத்தால் உருவாகும் பச்சிளம் சிசுக்களைக் கருவறையிலேயே கல்லறைக்கு அனுப்பும் ஏரோதுக்கள் எம்மிடையே இல்லையென்போமா? தனக்கு நிகரான அரசன் பிறந்ததைக் கேட்டு ஏரோது கலங்கியபோது, முழு எருசலேமுமே அவனோடு கலங்கியது. இன்றும் பல நாடுகளில் அதிகாரம் செலுத்தும் ஆளும் இனம், தமது சிறுபான்மை இனத்தவரைப் படுகொலை செய்வதைக் கேள்விப்பட்டு ஐக்கிய நாடுகளே கலங்கவில்லையா?

குழந்தை இயேசுவைத் தரிசிக்க ஞானிகள் வழிதேடி ஏரோதுவிடம் சென்றபோது, உதவி செய்வதாக ஏமாற்றினான். இன்றும் எம்மிடையே நல்ல செயல்களைத் தடுக்க வெனப் பல ஏரோதுக்கள் இணைந்து, நல்ல முயற்சிகளைத் திசை திருப்பிக் குழப்புவதில்லையா? அல்லது நல்லது செய்வோரை ஓரங்கட்டி ஒதுக்குவதில்லையா?

பாலகன் இயேசுவின் பிறப்பு மிக எளிமையானதாகும். இன்றைய உலக மாயக் களியாட்டங்கள், ஒருபால் திரு மணம், விவாகரத்து, திருமணம் செய்யாது கூடி வாழுதல் என்று கிறிஸ்து பிறப்பின் விழுமியங்களை இழந்த எம்மிடையே "கிறிஸ்து அர்த்தமுள்ளதாகப் பிறப்பது“ எப்போது?

ஆண்டவர் இயேசுவினுடைய பிறப்பு விடுதலையும், சமாதானமும் மட்டுமல்ல, பாவத்தின் அடிமையில் வாழ்வோர் விடுதலை பெறவும், ஏழைகள், புறந்தள்ளப்பட்டு ஒதுக்கப்பட்டோர் மறுவாழ்வு பெற்று அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதாகும். நுகர்வுக் கலாசாரச் சூழலில் “நான், என்னுடையது“ என்பது தவிர இவ்வாறான விழுமியங்கள் வாழப்படுகின்றதா?

ஆண்டுகள் பல கடந்தும், ஆண்டவர் இயேசுவின் பிறப்பு இன்று உலகம் முழுவதும் அர்த்தமின்றிக் குடியும் கும்மாளமும், விநோதமுமாகி, கிறிஸ்மஸ் தாத்தாவே பணம் வசூலிப்பவராக மாற்றமடைந்து, கிறிஸ்து பிறப்பின் அர்த்தமே குழிதோண்டிப் புதைக்கப்படும் நிலையில், கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் எமது உள்ளங்கள் மாற்றமடைந்து உள்ளதா? வானளாவக் கிறிஸ்மஸ் மரங்கள் உயர்ந்தாலும், எமது உள்ளங்கள் மனித மாண்பை உயர்த்தும் எண்ணக் கருத்துக்களால் உயர்ந்துள்ளதா? ஏழைகள் ஏழைகளாகத் தொடர்ந்து வாழ, செல்வந்தர் செல்வம் பெருக்கும் நோக்கத்தில் முன்னேற, ஒரு நேர உணவுக்காக ஏங்குவோர் எம்மிடையே இல்லை என்போமா? அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பு விழாவைக் காண, எமது வெளிவேடக் கிறிஸ்தவ வாழ்விலிருந்து புதுப்பிறப்பெடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தமர்வுகள், களச்சுற்றுலாக்கள் ஊடாக சமய நல்லிணக்கம்

சமய நல்லிணக்க செயற்பாடுகள் பற்றிய கடந்த மாத செய்தியில் திட்டத்தின் நோக்கம், சமய நல்லிணக்க குழுக்கள் உருவாக்கம், மாவட்ட மட்ட ஆலோசனைக்குழு செயற்பாடுகள், அனர்த்தகால உதவிகள் முதலியன வெளியிடப்பட்டிருந்தன. இம்மாத செய்தியானது சமய நல்லிணக்கக் கருத்தமர்வுகள், களச்சுற்றுலாக்கள் பற்றியும், அதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியும் தாங்கி வருகிறது.

மனிதநேயம் அருகிவரும் இக்காலகட்டத்தில் மனிதநேயத்தின் ஊடாக சமய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் கறிராஸ்-வாழ்வுதயம் தமது இலக்குக் கிராமங்களில் உள்ள சிறுவர்கள், இளையோர், சமய நல்லிணக்க குழு உறுப்பினர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து 'மனித மாண்பு' எனும் தலைப்பில் கருத்தமர்வுகளை ஏற்பாடு செய்திருந்தது. இக்கருத்தமர்வானது மற்றய சமயங்களையும், சமயத்தவர்களையும் மதிக்கவும், சகமனிதர்களாக ஏற்றுக்கொள்ளவும் தூண்டியுள்ளது. சமய மிதவாதப்போக்கில் சிலர் நமது சமூதாயத்தில் காணப்பட்டாலும் அதிகமானவர்களின் நடத்தையிலும், எண்ணக்கருக்களிலும், செயற்பாடுகளிலும் இக்கருத்தமர்வுகள் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சமய நல்லிணக்கக்குழு உறுப்பினர்களுக்கான கருத்தமர்வு

அடம்பன் இலக்குக் கிராமத்தில் சமய நல்லிணக்கக்குழு உறுப்பினர்கள் தமது வீடு சந்திப்புகளின்போது ஒரு இஸ்லாமிய குடும்பத்திற்கு தமது செயற்பாடுகள் பற்றியும், சமய நல்லிணக்கத்தின் அவசியம் பற்றியும் விளக்கினார்கள். அக்குடும்பத்தின் தாய் இந்தக்குழுவில் உறுப்பினராக இணைவதற்கு விரும்பியபோது அவருடைய மூத்த மகன்



அதனை விரும்பவில்லை சில மாதங்களின் பிற்பாடு நோயின் காரணமாக அத்தாய் இறந்துவிட்டதைக் கேள்விப்பட்ட சமய நல்லிணக்க உறுப்பினர்கள் அனைவரும் அவருடைய வீட்டிற்குச் சென்றார்கள். உணவுகளைச் சமைத்து வீட்டாருக்கும் உறவினர்களுக்கும் வழங்கினார்கள். இதனைக் கண்ட மூத்த மகன் ஓடிவந்து உறுப்பினர்களின் கரங்களைப் பிடித்து தான் பிழை செய்துவிட்டதாக அழுதார். அம்மாவுக்கும் பதிலாக தான் இந்த நல்லிணக்க குழுவின் செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக வாக்களித்தார். முஸ்லிம் உறவுகள் நிறைந்திருந்த அந்த வீட்டில் தமது தாய்க்கு அனைத்து சமயங்களின் வழிபாடுகளையும் செய்வதற்கு அனுமதியளித்தார். வழிபாடுகள் நடந்துகொண்டிருக்கும்போதே வாய்விட்டு அழத்தொடங்கினார். 'என் தாயே! இந்து, கிறிஸ்தவம், முஸ்லிம் எனும் மூன்று கடவுள்களின் ஆசிகளைப் பெறும் பாக்கியம் பெற்றாயே' என்று. கூடியிருந்த இஸ்லாமிய உறவினர்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் நோக்கினார்கள். பலர் பாராட்டினார்கள். இவ்வாறு கருத்தமர்வுகள் உறுப்பினர்களின் வாழ்வியல் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளமை கண்கூடு.

### சிறுவர்களுக்கான கருத்தமர்வு

'மனித மாண்பு' எனும் தலைப்பிலான கருத்தமர்வானது சிறுவர்களுக்கு நடாத்தப்பட்டபோது அவர்களுடைய



எண்ணக்கருக்களிலும் புதிய சிந்தனைகள் உருவாக்கப்பட்டமையை அவதானிக்க முடிந்தது. கருத்தமர்வுக்கு முன்பு யாருடைய சமயம் முதன்மையானது, பெரியது என்று கேட்கப்பட்டபோது இந்துசமயச் சிறுவர்கள் தமது சமயம்தான் புராதனமானது, பழையது, பெரியது என்றார்கள். இவ்வாறே, கிறிஸ்தவச் சிறுவர்களும், இஸ்லாமியச் சிறுவர்களும் தத்தமது சமயங்களே பெரியது, முதன்மையானது என வாதிட்டார்கள். அவர்களின் பெற்றோர், சமயத் தலைவர்கள், நண்பர்கள், சமூகம் என்ற வட்டத்தால் ஊட்டப்பட்ட உள்ளீடுகளின் விளைவு என்பது சிறுவர்களின் பகிர்வுகளில் இருந்து புலனாகியது. கருத்தமர்வின் ஊடாக சமயங்களிற்கு மேலாக ஒன்று உள்ளது என்பதை பிஞ்சுகள் வஞ்சகமின்றி ஏற்றுக்கொண்டன. 'மனிதம்' என்பதுதான் மேலானது, முதன்மையானது என்போர் உங்கள் கரங்களை உயர்த்துங்கள் என்றபோது என்ன ஆச்சரியம் எந்தவிதமான தயக்கங்களும் இல்லாமல் அனைத்து சிறுவர்களின் கரங்களும் அக்கணமே உயர்ந்து கொண்டன.

தமது அனுபவப்பகிர்வுகளை மேற்கொண்ட இஸ்லாமிய சிறுமிகள் தமது கட்டுப்பாடுகளையும், குறுகிய நட்பு வட்டத்தையும் தாண்டி 'இன்று' தாம் அனைத்து சமய சிறுவர்களோடு உறவாடுவதும், நட்புக் கொண்டாடுவதும் தமது மனநிலை மாற்றத்தின் வெளிபாடு என்கிறார்கள். கிறிஸ்மஸ் காலத்தில் கிறிஸ்தவர்களின் வீடுகளுக்குச் செல்வதும், தீபாவளியின் போது இந்து நண்பர்களின் வீடுகளுக்குச் செல்வதும், றம்ழான் கொண்டாட்டடித்திற்கு அனைவரும் தமது வீடுகளுக்கு வருவதும் ஓர் மகிழ்ச்சியான தருணம் என்றும் இவர்களுடைய வருகை எங்களுடைய பெற்றோர், உறவுகள்



மட்டத்திலும் மற்றய சமயங்கள் தொடர்பான நல்லெண்ணங்-களைத் தோற்றுவித்துள்ளதாகப் பகிர்ந்துள்ளார்கள்.

### களச்சுற்றுலாக்களும் சமய நல்லிணக்கமும்

சிறுவர்கள், இளையோர், பெரியவர்கள் சமய ஸ்தலங்களைத் தரிசிப்பதற்காக யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் முதலிய இடங்களில் உள்ள இந்துக் கோவில்கள், இஸ்லாமிய பள்ளிகள், பௌத்த விகாரைகள், கிறிஸ்தவ ஆலயங்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அந்த ஸ்தலங்களின் வரலாறு, வழிபாட்டு முறைகள், பாரம்பரியங்கள், நம்பிக்கைகள் பற்றி அந்தந்த சமயத் தலைவர்கள் விளங்கப்படுத்தினார்கள்.

இந்த அனுபவங்களைப் பற்றி மக்கள் பகிரந்துகொள்கையில் பலர் தம் வாழ்வில் முதற்தடவையாக ஏனைய சயமத் தலங்களுக்குள் கால் பதித்துள்ளார்கள். மறக்கமுடியாத இந்த அனுபவத்துடன் தாம் மற்றய சமயங்களைப் பற்றி ஆழமாகவும், தெளிவாகவும் அறிந்து கொள்ளும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. இதனால் மற்றய சமயங்கள் பற்றிய மதிப்பும், மரியாதையும், அக்கறையும் அதிகரித்துள்ளதாகக் கூறியுள்ளார்கள். ஏனைய சமயங்களின் வழிபாடுகள் சடங்குகள் ஓர் புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய அனுபவங்கள் நிட்சயமாக சமய நல்லிணக்கத்தைத் தோற்றுவிக்கும் என்பது வெள்ளிடை மலையான உண்மையாகும். சமய ஒற்றுமையை, ஐக்கியத்தை சீர்குலைக்க ஆங்காங்கே கட்டவிழ்த்துவிடப்படும் நிகழ்வுகள் இனி ஒருபோதும் சமய நல்லிணக்கத்திற்கு கலங்கள் விளைவிக்க இந்த மக்கள் இடமளிக்க மாட்டார்கள் என்பது நன்கு புலனாகிறது. இவர்களோடு கைகோர்க்கவும், இவர்களுடைய உறுதியான மனநிலையினை அனைத்து மக்களும், குறிப்பாக இவ் வாசகர்களும் கொண்டிருக்கவும் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

### சமய முரண்பாடுகள் தணிக்கப்பட்ட, தடுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்

சமய நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் பல முன்னெடுக்கப்பட்டாலும், முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் யாரோ சிலர் ஈடுபட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். இதன் சிறப்பு, வெற்றி என்னவென்றால் விசமிகளால் முன்னெடுக்கப்பட்ட எந்த முயற்சிகளும் அவர்களுக்கு தோல்வியையே அளித்தது, மாந்தைமேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இந்து, கிறிஸ்தவ சுருபங்கள் உடைக்கப்பட்டன. அந்த வேளைகளில் சமூகத்தை தெளிவு படுத்துவதிலும், ஐக்கியப்படுத்துவதிலும் சமய நல்லிணக்க குழுக்கள் வெற்றிகண்டன. கிறிஸ்தவர்கள் இந்துக்களின் சுருபங்களை நிறுவுவதற்கான இடங்களை வழங்கியுள்ள புரட்சிகரமான நிகழ்வுகளும் நடந்துள்ளன. இது விசமிகளுக்கு நல்ல சாட்டையடியாக அமைந்தது. இதேபோன்று நானாட்டான் பிரதேசத்தில் இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இதனை அவதானித்த இந்துக்குருக்கள் உடனடியாக கத்தோலிக்க குருக்களுக்கு அறிவித்தார். இத்தகவல் குறித்த சமய நல்லிணக்கக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. உறுப்பினர்கள் ஒன்றுகூடி இதுபற்றிக் கலந்துரையாடியதுடன் மக்களுக்கு குறிப்பாக இளையோருக்கு தெளிவூட்டல் வழங்கியதுடன் வீடுகளிலும் இது தொடர்பான விடயங்கள் பேசப்பட்டது. விசமிகள் எதிர்பார்த்ததுபோல் எந்தவிதமான முரண்பாடுகளும் ஏற்படவில்லை. மக்கள் ஒற்றுமையாகவே இருந்தார்கள்.

சமய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பவும், இருக்கும் நல்லிணக்தைத் தக்கவைத்துக்கொள்ளவும் பல்வேறுபட்ட செயற்பாடுகளை கறிராஸ்-வாழ்வுதயம் முன்னெடுத்து வருவதை அனைவரும் அறிவோம். கருத்தமர்வுகள், களச்சந்திப்புக்கள், உறவுப்பால நிகழ்வுகள், பொதுவிழாக் கொண்டாட்டங்கள், விளையாட்டு விழாக்கள் என பல நிகழ்வுகள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றான. இவை அனைத்தும் அரச அதிகாரிகளின் ஒத்துழைப்போடும், வழிகாட்டலோடும் இடம்பெறுவதுதான் வெற்றியின் மூலகாரணம்.

# செபமே ஜெயம்...

செபங்கள் பலவகை. அவைகளில் முக்கியமானவைகள். ஆராதனை செபம், மன்னிப்பு செபம், புகழ்ச்சி செபம், செவிமடுத்தல் செபம், மன்றாட்டு செபம், அர்ப்பண செபம், நன்றி செபம்: திருப்பலியில் இறைவனை சந்திக்கிறோம். திருப்பலிதான் சிறந்த செபம். அதில் எல்லா வகையான செபங்களும் அடங்கியுள்ளன.

**ஆராதனை செபம்:** திருப்பலிக்கு ஆலயம் சென்றவுடன் நாம் செய்வது என்ன? முழந்தாளிட்டு நம்மை தாழ்த்தி, நித்திய ஸ்துதிக்குரிய சொல்லுகிறோம். இறைவனை ஆராதிக்கிறோம். தந்தை, மகன், தூயஆவியை பணிந்து ஆராதிப்போம். பாடல்களால் ஆராதிக்கலாம். அமைதியில் ஆராதிக்கலாம். இறைவன் ஆராதனைக்குரியவர். இறைவனை மட்டுமே நாம் ஆராதிக்க வேண்டும்.

**மன்னிப்பு செபம்:** திருப்பலி ஆரம்பமாகிறது. நமது பாவங்களுக்கு மன்னிப்பு கேட்கிறோம். நான் பாவி என்று ஏற்றுக்கொள்கிறேன். ஆண்டவரே இரக்கமாயிரும், ஆண்டவரின் இரக்கத்தையும் மன்னிப்பையும் பெறுகின்றோம்.

**புகழ்ச்சி செபம்:** உன்னதங்களிலே இறைவனுக்கு மகிமை உண்டாகுக என்று பாடி ஆண்டவரை புகழ்கிறோம். இது சிறப்பான செபம். இசையால் ஆண்டவரைப் புகழ்வோம். திருப்பலியே புகழ்ச்சி பலிதான். இயேசுவோடு, அவர் வழியாக தந்தையை புகழ்கிறோம். ஆண்டவரை நான் எந்நேரமும் போற்றுவேன். அவரது புகழ் எப்போதும் என் நாவில் ஒலிக்கும். (திபா 34-1)

**செவிமடுத்தல் செபம்:** திருப்பலியில் அடுத்து வருவது வார்த்தை வழிபாடு, விவிலியத்திலிருந்து வாசகங்கள் வாசிக்கப்படுகின்றன. இறைவார்த்தை வழியாக இறைவன் பேசுகிறார். அவர் குரலுக்கு செவிமடுக்கின்றோமா? இவரே என் அன்பார்ந்த மகன்! இவருக்கு செவிசாயுங்கள்! (மத் 17-5). ஆண்டவரே பேசும், அடியவன் கேட்கிறேன் (1சாமு 3-10). அநேகத் தீமைகளுக்குக் காரணம், இறைவார்த்தையை கேட்டு இறை சித்தத்தை நாம் நிறைவேற்றுவதில்லை.

**மன்றாட்டு செபம்:** அடுத்து மன்றாட்டு. கேட்ட இறை வார்த்தையின்படி வாழ செபிப்பதே சிறந்த மன்றாட்டு. மேலும் திருச்சபைக்காகவும், உலகிற்காகவும் செபிக்கிறோம். இதுவே விசுவாசிகளின் மன்றாட்டு.

**அர்ப்பண செபம்:** திருப்பலியில் அப்ப, இரசத்தோடு நம்மையே காணிக்கையாக்குகிறோம். இதுவே அர்ப்பணம். நமது வாழ்வே ஒரு பலி. தினமும் திருப்பலியில் நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம். நமது அர்ப்பணத்தை தினமும் புதுப்பிப்போம். நம்மையும் நம் வாழ்வையும் நம் இன்ப துன்பங்கள், வேலை வருத்தங்கள், பாவங்கள், பலவீனங்கள், வெற்றி தோல்விகள், பகை வெறுப்புக்கள், நமது குடும்பப் பிரச்சனைகள், செபங்கள், தவங்கள், அனைத்தையும் பலியாக ஒப்புக் கொடுப்போம். எனக்குப் பிடித்தது அர்ப்பண செபம்தான். நான் விரும்பி செபிப்பது இந்த செபம் தான். புனித மார்க்கிரேட் மரியம்மாளின் சேசுவின் திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கும் செபத்தை தினமும் நற்கருணை வாங்கியபின் சிறு வயதிலிருந்தே செபிப்பேன். இந்த செபமே என் வாழ்வை மாற்றியது.

**நன்றி செபம்:** இறுதியில் நன்றி செபம். நமது வாழ்வே ஒரு நன்றி செபமாக மாற வேண்டும். எந்நேரமும் நன்றி கூறுங்கள் (எபே 5-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டொருங்கியக்கத் திருஅவையாக விளங்க! விழித்தெழுங்கள்! இளையோரே!

## கி.அருளப்பு – விடத்தல்தீவு

வாழ்க்கை என்பது இறைவன் படைத்த ஓவியம் வாழ்வதென்பது மனிதன் படைத்த காவியம். மனிதனுடைய வாழ்வு அவனுக்கே உரித்தான ஒரு சிறந்த சொத்து. அவன் உடலாலே பிறந்து உள்ளத்தாலே உயர்வடையக் கூடியவன். அவன் இல்லாமை ஒன்றிலிருந்து தான் விரும்புகின்ற நிலையை அடையக் கூடியவன். அதாவது ஒரு இலட்சியத்துக்காக வாழ அழைக்கப்பட்டவன்.

சிந்தனை என்பது மனித வாழ்வின் உயிர் மூச்சு. முதலில் சிந்திக்கின்றான் பிறகு பேசுகின்றான். பின்பு செயலாற்றுகின்றான். சிந்தனை நல்லதாக இருந்தால் அவன் செயல்கள் நல்லவையாக இருக்கும். செயல்கள் நல்லவையாக இருந்தால் அவன் வாழ்வு பரிசுத்தமாக இருக்கும். சிந்தனை எதிர்மறையானதாக இருந்தால் அவன் செயல்கள் கெட்டதாக இருக்கும். செயல்கள் தூய்மை அற்றதாக இருந்தால் அவன் வாழ்வும் இருளடைந்ததாக இருக்கும். 2023ம் ஆண்டு கூட்டொரு திருஅவையாக விளங்க இளைஞர்களே விழித்தெழுங்கள் என அழைக்கின்றது.

அன்பர் பணி செய்ய என்னை ஆழாக்கிவிட்டுவிட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே. என்று தாயுமானவர் தன்னுடைய பாடலிலே கூறி இருக்கின்றார். கடவுளுக்கு தொண்டு செய்ய கடவுள் உங்களை ஆளாக்கி விட்டுவிட்டால் உங்கள் வாழ்வில்வரும் ஒவ்வொரு நிலைகளும் இன்பமே என்று அந்த ஞானி ஒவ்வொரு இளம் நெஞ்சங்களையும் கேட்கின்றார். இளம் சிங்கங்களே இளமைக்கு சொந்தங்களே! உறங்கும் உன் விழிகளைத் திறந்து ஆற்றெழுந்து ஓடிவா! இரசிகர் மன்றங்கள் திறக்க வல்ல இரட்சிக்கப்படாத மனிதர்களின் தூசியைத் தட்டிவிட ஓடிவா!

வழியில் உன்னை பாதுகாக்கவும் நான் ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ள இடத்துக்கு கொண்டு சேர்க்கவும் இதோ நான் உனக்கு முன் ஒரு தூதரை அனுப்புகிறேன். அவர் முன் எச்சரிக்கையாய் இரு அவர் சொற் கேட்டு நட. அவரை எதிர்ப்பவராய் இராதே! உன் குற்றங்களை அவர் பொறுத்துக் கொள்வார். ஏனெனில் என் பெயர் அவரில் உள்ளது. நீ அவர் சொற்கேட்டு நடந்தால் நான் உன் எதிரிகளுக்கு எதிரியும் உன் பகைவர்களுக்கு பகைவருமாவேன். ( வி.ப. 23. 20-22 ) என்று ஆண்டவர் அழைக்கின்றார்.

இதை விபரிக்க ஒரு நிகழ்வு ஒரு முறை ஒரு குருவானவர் ஒரு நடிகையிடம் சென்று ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதன் அவசியத்தைப் பற்றி விபரித்தார். ஆனால் அவளோ தன் வாலிபத்தில் புகழ் பெறும் வழியில் செல்ல விரும்புவதாகவும் வயது முதிர்ந்த பின் கடவுளைத் தேடும் வழியில் வருவதாகவும் கூறினார். இதனால் வருத்தமடைந்த குரு அவள் கொடுத்த தேனீரை முழுவதும் குடிக்காமல் பாதியோடு அவளுக்கு முன் நீட்டி நீயே இதைக் குடித்து முடித்துவிடு என்றார். அவளோ எரிச்சலடைந்து நீர் குடித்த பாதி எச்சில் தேனீர் எனக்கு வேண்டாம் என்று வைத்து விட்டாள். உடனே அந்த குருவானவர் நீர் இந்த தேனீரை எச்சில் என்று மறுத்ததைப் போலவே ஆண்டவர் இயேசு ஒருநாள் உன்னை மறுதலிப்பார். வாலிபத்தின் இச்சையில் வாழ்ந்துவிட்டு மீதியை உன்னை படைத்த இறைவனுக்கு கொடுக்கும் எச்சில் வாழ்க்கை




எனக்கெதற்கென்று உன்னைப் பார்த்து கேட்பார் என்றார்.

விவிலியம் சொல்கின்றது மனிதரின் வழிகளுள் ஒன்றும் ஆண்டவர் கண்களுக்குத் தப்புவதில்லை. அவர்களுடைய பாதைகளையெல்லாம் அவர் சீர்தூக்கிப் பார்க்கின்றார். (நீதிமொழிகள் 05.21) பரபரப்பான வாலிப பருவத்தில் பலவிதமான எண்ணங்கள் கற்பனைகள் கனவுலக சஞ்சரிப்புகள் வந்து போகலாம். உன் இளமையை அசட்டை பண்ணக்கூடியதாயும் இருக்கலாம். நீ நிலையற்றவனாய் உறுதியான மனநிலை இல்லாதவனாய் இருந்தால் யார் உன்னை மதிப்பார்கள். சிந்தித்துபார் உன் இளமைகுறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாத படிக்கு நீ வார்த்தையாலும், நடவடிக்கையாலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசிகளுக்கு முன் மாதிரியாய் இரு (1திமொத்தெயு 04.12) என்று இறைவார்த்தை சொல்லுகின்றது. காலங்கள் மாறலாம் தேடல்கள் தீவிரமாகலாம் ஆக்கங்கள் அழியலாம் ஆனால் என்றுமே அழியாத இறை வாழ்வை, நிலை வாழ்வை உள்வாங்க ஆண்டவர் இயேசு உங்களை அழைக்கின்றார்.

அவர் தமது இளமைப் பருவத்தில் ஞானத்திலும் அறிவிலும் சிறந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார் என்பதை நாம் அறிவோம். இக்கால இளைஞர் யுவதிகள் பின்பற்ற வேண்டிய அருமையான குணாதிசயங்கள் இவைகளே! எனவே சிந்தியுங்கள்! நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நமக்கு இரு வழிகள் உண்டு. ஒன்று நன்மைக்கும் வாழ்விற்கும் இட்டுச் செல்லும் வழி. இன்னுமொன்று தீமைக்கும் சாவிற்கும் இட்டுச் செல்லும் வழி. ஒன்று வளரும் ஒளியைப் போன்றது. மற்றையது அழிக்கும் இருளைப் போன்றது. முதல் வழி ஒடுங்கியது. அதை ஒரு சிலரே நாடுவர். மற்றையது பரந்து விரிந்தது அது பலரை வலிய ஈர்ப்பது. இதில் எவ்வழி நல்வழியென்று இளையோராகிய நீங்களே சிந்தியுங்கள். கிறிஸ்து நமக்கு காட்டும் வழி வாழ்வழிக்கும். முதல் வழி அவர் காட்டிய வழி மட்டுமல்ல. அவரே அவ்வழியுமாவார்.

என்னிடம் மன்றாடு உனக்கு நான் செவிசாய்ப்பேன் நீ அறிந்திராத செயல்களையும் மாபெரும் மறைபொருளையும் உனக்கு நான் விளக்கி கூறுவேன். (எரேமி.33.3) என்கின்றார் ஆண்டவர். எனவே இளைஞனே யுவதியே நல்வழிநின்று நற்பணிபுரிய அவர் ஒளி செல்ல அன்னையாம் திருச்சபை உங்களை அழைக்கின்றது. ஆண்டவன் வாசல் அளவில் சிறியது. சாத்தான் வாசல் சாலையில் பெரியது. அதிலே செல்பவர் அளவில் குறைவு. இதிலே செல்பவர் எத்தனை பேரோ. குறுகிய வாசலில் குனிந்து செல்லுங்கள். நிறைந்த இடத்தில் நின்மதி பெறுவீர்கள். சோர்ந்து விட்ட மனிதன் தனக்குதானே பகைவன். துணிந்து விட்ட மனிதன் சாவுக்கு பகைவன். பயந்தவனுக்கு இவ்வுலகம் வழிபாட்டு பொருள். துணிந்தவனுக்கு குவலயம் இறைவன் வாழும் இல்லம்.

நன்றி.

**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்.

# மனிதநேயம்

சக மனிதர்களை அன்பு செய்வது மனிதநேயம் எனப்படும். மனிதநேயம் என்பது மானுடத்தின் மகத்தான பண்பு சகல மதங்களும் மனிதநேயத்தை வலியுறுத்துகின்றன, வற்புறுத்துகின்றன.

அன்னைத் திரேசா மனிதநேயத்திற்கு சாட்சியாக வாழ்ந்த ஒரு புனிதை ஆவார். மரணிக்கும் நிலையில் காணப்பட்ட ஒருவரை அன்னை திரேசா தனது இல்லத்திற்கு கொண்டு செல்வதை கண்ட ஒருவர் "அவர் இறக்கப் போவது தெரிந்தும் ஏன் அவரை உங்கள் இல்லத்திற்கு கொண்டு செல்கிறீர்கள்?" என்று அன்னையிடம் கேட்டார். " மரணிக்கும் வேளையில் அன்பையும் அரவணைப்பையும் அனுபவித்த திருப்தியோடு, அவர் உயிர் பிரிய வேண்டும்" என்று அன்னை திரேசா பதில் சொன்னார். மனிதநேயத்தை விளக்கும் ஒரு சம்பவம் இது.

இயேசு சொன்ன நல்ல சமாரித்தன் உவமை மனிதநேயத்தோடு நாம் வாழவேண்டும் என்று நமக்குக் கற்பிக்கின்றது. அன்னை மரியா மனிதநேயமுள்ளவராக வாழ்ந்து நமக்கு முன்மாதிரியாக திகழ்ந்தார்.

இன்றைய அவசர உலகில்தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்கின்ற மனநிலை பலரிடத்திலும் காணப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனிலும் இறைவனைக் காணும் போது மனிதநேயமுள்ளவராக நாம் வாழ முடியும்.

மனிதநேயத்துடன் வாழ்வோம்
இறைவனுக்கும் மனிதருக்கும்
உகந்தவர்கள் ஆவோம்.



டேவிட் ஜெறோம் யனோசன்
ஆண்டு 06
மன்.மாவிலங்கேணி றோ.க.த.க.பாடசாலை
முருங்கன்.

# கிறிஸ்துமஸ் தாத்தா

❖ கிறிஸ்துமஸ் தாத்தா சாண்டாகிளாஸ் என்று அழைக்கப்படும் புனித நிக்கோலஸ்.

❖ அவர் துருக்கி நாட்டில் பாதரா என்ற ஊரில் கி.பி 352ம் ஆண்டில் பிறந்தார்.

❖ இவர் ஒரு ஆயர்.

❖ கிறிஸ்துமஸ் தினத்தன்று குழந்தைகளுக்கு அவர்கள் நினைக்காத பரிசுப் பொருட்களைக் கொடுத்து இன்ப அதிர்ச்சியில் ஆழத்துபவர். அது முதல் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமிட்டு குழந்தைகளை மகிழ்விக்கும் பழக்கம் உண்டானது.

❖ புனித நிக்கோலஸ் இறந்த நாளை (டிசம்பர் 6ம் திகதி) கிறிஸ்துமஸ் தாத்தா தினம் என்று அழைக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் களம்

## சின்னப்பாலா

சின்னச்சின்ன பாலா நீ
சிசுவாய் எம்மில் வந்திடுவாய்
சிறுவர் நாங்கள் மகிழ்ந்திருக்க
அன்னை மடியில் தவழ்ந்திடுவாய்

பிறக்க உமக்கு இடமில்லை
சிறுவர் உள்ளம் நாம் தருவோம்
பிஞ்சுப் பிள்ளை நாம் உம்மை
பிரியமுடனே வரவேற்போம்

கடவுள் மகவாய் வந்தவரே
கருணை உள்ளம் கொண்டவரே
நிலையாய் என்றும் நாம் வாழ
நிமலா நீரும் விரைவாய் வா

நாட்டில் நிம்மதி இல்லையையா
நாளும் வாழ்வில் துன்பமையா
உந்தன் வரவு தான் மட்டும்
உலகினில் நிம்மதி தருமையா

இன்னல் துடைக்க யாருமில்லை
இதுவரை எமக்கு அமைதியில்லை
இறைவா விரைவாய் நீர் வந்தால்
இலங்கை விரைவில் அமைதி பெறும்

ந. ஆன் சுஜோதினி
சுண்டிக்குழி, முருங்கன்.

## பாலனே பாலனே என் அன்பான பாலனே

அனைத்தும் ஆகும் அவனியிலே
அதிசயமாய் உருவான அழகான பாலனே

கண்ணிமைக்கும் நேரத்திலே கன்னியின் உதரத்திலே
விருட்சமாய் உருவெடுத்த அன்பான பாலனே.

உலகின் பாவம் போக்க பாவிகளை மனமாற்ற
பாமரனாய் வந்துதித்த அழகான பாலகனே

இச்சை கொண்ட உலகிலே பச்சை உள்ளத்தோடு
மிச்சம் நீதி உரைத்திட பச்சிளம் குழந்தையாய்
உதித்தாயோ.

கவலை நீக்கிட இந்நாட்டின் காரிருள் போக்கிட
கவனமாய் கருவிலே இருந்து சீறிப்பாய்ந்து வந்தாயோ

பாழான மனம் கொண்ட இந்நாட்டு நரிகளை
பதம்பார்க்கவே
இப்பாரினில் பாதம் பதித்தாயோ

உன் கால் தடத்தினை நிலையாய் பதித்திடு
இதுதான் இன்றைய நிலையின் நீதியாய் நிலைத்திடும்.

யூட்செபஸ்ரியான் அனுஷ்யா நியாளினி பீரிஸ்
மடுமாதா வீதி, பெரியகமம்,
மன்னார்

## பூத்தது ஒரு பூ



பூத்தது ஒரு பூ
புனிதமாய்
விண்ணின் வாசனையை அது
மண்ணுக்குக் கொண்டு வந்தது
பூவுலகில் நல்மனத்தோரெல்லாம்
மகிழ்ந்தனர் அதன் மலர்தலில்
அது இதழ் விரித்துச் சொன்னது
" ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள் "
மார்கழி திங்களது மதிப்புற
பூத்தது ஒரு பூ புனிதமாய்
விண்ணின் வாசனையை அது
மண்ணுக்கு கொண்டு வந்தது.

ஜெயாபாலாஜி
முருங்கன்

## விண்ணின் உடுவினிடை ஒளி தவழ் மதி மண்ணில் மலர்ந்தது

இறை வேதம் கரமேந்தி
மறை வேதம் பாரில் தளைத்திட
மண்ணில் மழலையாய்
மாதவனும் பிறந்திட்டார்.



களை களைந்த விளைநிலமாய்
காசினியும் மீட்டிப் பெற,
பாவ இருள் நீங்கிடவே,
பாலகனும் பிறந்திட்டார்.

ஏழ்மையின் வடிவம் தாங்கி
இறைவேதம் நிலைபெறவே
அன்புக்கரம் பொழிந்திடவே
அகிலமதில் வந்துதித்தார்.

அ. கெவின் துவாரகா
தரம் - 10
காத்தான்குளம் பங்கு, மன்னார்.

## மனிதம் மலர மண்ணிலே பிறந்தார்

விண்ணிலே தேவன் விடிவெள்ளியானார்...!
மண்ணுலகு மலர்ந்திட மரியின் மடியினில் தவழ்ந்தார்...!
கடவுளின் மாட்சியால் கருவிலே மலர்ந்தவர் ...!
உடலெடுத்து சாட்சியாய் உருவமாய் தோன்றினார் ...!

கலியுக காலமதில் நாம் கதிகலங்கி நின்றாலும் ...!
கருணையுடன் எம் தேவன் கண்ணெதிரே தோன்றினார் ...!
உருவிலா தேவன் உண்மையாய் மலர்ந்திட்டார் ...!
தெருவோரம் நிற்போர்க்கு அருளிரக்கம் கொண்டிடுவார் ...!

பாரமான சுமைகளை தூரமாக எறிந்திடுவார் ...!
ஆதாரம் அற்றவரை அன்போடு அணைத்திடுவார் ...!
மாறாத பிணி நீக்கும் மருந்தாக மாறிடுவார் ...!
தீராத எம் கவலைகளை களைந்தவர் காத்திடுவார் ...!

ஏழ்மையின் தவிப்பால் ஏங்கி நிற்ப்போர்க்கும் ...!
வீழ்ந்த வாழ்வில் விடிவின்றி தவிப்போர்க்கும் ...!
சூழ்ந்த துன்பம் தொடர் கதையானோர்க்கும் ...!
சோகங்கள் களைந்து சுகபோகங்கள் தந்திடுவார் ...!

மனிதம் மலர்ந்திட மண்ணிலே பிறந்தார் ...!
புனிதம் நிலைத்திட புண்ணியனாய் மலர்ந்தார் ...!
உத்தமனாய் பிறந்த உன்னத தேவனை...!
சொத்தாக வணங்கி நாம் போற்றி மகிழ்ந்திடுவோம் ...!

அ. ஜஸ்மின் ஷறோன்
ஆவணம், நானாட்டான்.



## பிறப்பின் புதுமை

பூமியில் புதுமை நடந்தது உண்மை
புள்ளினங்கள் பாடி ஆடிய மேன்மை
விண்ணவர் மண்ணவர் கூடிய உண்மை
இறைமகன் மனுவாய் தோன்றிய புதுமை

ஆண்டவன் அடிமை ஆகிய தாய்மை
அனைத்தையும் ஏற்ற ஆண்மையின் தூய்மை
திருவின் குடும்பமாய் இணைந்த இனிமை
இதுவே இறைவன் காட்டிய புலமை

கொட்டிடும் பனியில் மழலையின் சத்தம்
சத்திரம் இறைவனின் பிறப்பின் சித்தம்
வானவர் கூட்டம் வந்துமே நாட்டம்
இன்னிசை முழங்கினர் இடையர்கள் கூட்டம்

வானிலே வால்வெள்ளி வழியதைக் காட்ட
வள்ளலாம் ஞானிகள் பாலனைத் தேட
ஈற்றிலே அவர்களும் சத்திரம் நாடி
இறைவனைக் கண்டார் அதிசய மகவாய்

வானவர் கூட்டம் வாழ்த்திய மழலை
ஆயர்கள் கூட்டம் போற்றிய மகிமை
ஞானிகள் கூடி வாழ்த்திய பெருமை
அதுவே மழலை இயேசுவின் வருகை

ஈழத்தில் துன்பம் கழையவே வருவாய்
இகபடு வாழ்வை எமக்கென்றும் பொழிவாய்
இன்பமாய் நாங்கள் வாழ்ந்திடச் செய்வாய்
இறைவா! வருவாய்! விரைவாய்!! எமக்காய்!!!

சி.சுஜீபன் - மடுறோட் பங்கு

## விடுதலையின் விடியல்

விடுதலையின் விடியல்
மனுக்குலத்தின் விடியல்
அடிமைகளின் விடியல்
ஒடுக்கப்பட்டோரின் விடியல்
பாவிகளின் விடியல்
பரத்தமையின்று விடியல்
பிறர் நலத்தின் விடியல்
மீட்பின் விடியல்
சமநீதியின் விடியல்
சரித்திரத்தின் விடியல்
சாவினின்று விடியல்
விண்ணகத்தின் விடியல்
விடிவெள்ளியை ஆடையாய்
சூடிய அன்னையின்
திருவயிற்றில் விடியலின் நாயகன்
வானகத் தந்தையின் திருமகன்
நமக்காய் விடுதலையின்
விடியலாக உருவெடுக்கும் திருநாள்
மாந்தர் மகிழும்
பெருநாள் கிறிஸ்மஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.234
# பிலிப்பியர், கொலோசேயர் திருமுகங்கள்

உங்கள் விடைகளை மாசி மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | 03 | | | 04 | | 05 |
| | ✱ | | | 06 | ✱ | ✱ | 07 | | |
| 08 | | | 09 | | | | | 10 | |
| | ✱ | ✱ | | ✱ | ✱ | ✱ | ✱ | ✱ | 11 |
| 12 | | | 13 | | | 14 | | ✱ | |
| | ✱ | ✱ | ✱ | ✱ | ✱ | | ✱ | ✱ | ✱ |
| | ✱ | | 15 | | 16 | | | ✱ | |
| | | 17 | ✱ | ✱ | 18 | | | | 19 |
| | ✱ | | | | 20 | | ✱ | ✱ | |
| 21 | | | | 22 | | 23 | | | 24 |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. கிறிஸ்துவுக்காகவே ...... என்பது................ மாளிகைக்..... தெளிவாயிற்று.
3. ஒரு திருமுகத்தின் சுருக்குப் பெயர் ....................................
7. நான் ................... வேண்டிய ................... வேண்டுங்கள்.
8. ............ப்பட்டிருக்கும் என்னை நினைத்துக் கொள்ளுங்கள்.
12. தம் மகனது ............ வழியாகக் ............ஒப்புரவாக்கினார்.
13. அவர்களது நோக்கம் தூய்மையானது..................................
14. நீங்கள்................ எண்ணமும் ............நிறைவாக்குங்கள்.
15. இவர்களைத் தூண்டுவது ...................... (ஒரு எழுத்து குறிலாக உள்ளது).
16. என் உடலால் ..................ப் படுத்துவேன்.
18. கிறிஸ்து ...................... உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார்.
21. அணி செய்ய வேண்டிய பண்புகளில் ஒன்று ....................
22. என் விடுதலைக்கு ................ வகுக்கும்

### மேலிருந்து கீழ்

1. மகனின் .......................................... க்குட் படுத்தினார்.
2. கடவுளுக்கு ................................. செலுத்துங்கள்.
3. குற்றமும் ...................... மற்றவர்களாய்....... திகழ்வீர்கள்.
5. சில கொள்கைகள் ....................................க் கிடந்தன.
6. செயல் ......................... மாறு இறைவனை வேண்டுகின்றேன்.
11. ................................ யடித்து அறவே ஒழித்துவிட்டார்.
12. கடவுளது ...................... படைப்பனைத்திலும் தலைப்பேறு.
14. உலகில் .......................... சுடர்களாகத் துலங்குவீர்கள்.
17. அணி செய்ய வேண்டிய இன்னொரு பண்பு......................

### வலமிருந்து இடம்

4. தமது உடலின் ................உருமாற்றவும் ................வல்லவர்.
5. மேலிருந்து விடுக்கும் அழைப்பே அப்........................கும்.
6. ஒப்பந்த விதிகள்........................ கொண்ட ..................விட்டார்.
10. அகற்ற வேண்டிய பண்பில் ஒன்று ................................
17. சிலுவைக்குப் ............................ வர்களாய் நடப்போர் பலர் உள்ளனர்.
19. ஒழித்துவிட வேண்டிய உலகப்போக்கு தீய........................
20. .......................யாக உழைக்கின்றார் என்பதற்கு நான் சாட்சி. (முதல் எழுத்து நெடில்)
22. என் ............................... செலவில் பங்கேற்கவில்லை.
24. தலைமை ........................ வோர்............... படைக்கப்பட்டனர்.

### கீழிருந்து மேல்

7. பொய் ................................................... தீர்கள்.
9. வேறு ...................... நன்மனத்தோடு அறிவிக்கின்றனர்.
10. .........................ன் அரண்மனைப்.............. கூறுகிறார்கள்.
11. தூய......................... யினால்........ கொண்டுள்ளீர்களா?
12. உழைக்கிறார் என்பதற்கு நான்..................................
13. ஆண்டவருக்கு.......... முழுமனத்தோடு வேலை செய்யுங்கள்.
17. நற்செய்தி .................................. சாற்றப்பட்டுள்ளது.
21. ...................... யாக ...................... நான் சாட்சி.
23. வாழவேண்டும் என்பதை மற்றொரு .........................
24. நமக்கோ விண்ணகமே .............................................

### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல 232ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

T. சுஜாந்தினி, மன்னார்.
R. கெற்சியா பிகிறாடோ, பள்ளிமுனை கிழக்கு.
J.T. றேச்சல், பள்ளிமுனை மேற்கு.
J. ரேறியன், பள்ளிமுனை மேற்கு.
R. றொயின்சி பிகிறாடோ, பள்ளிமுனை கிழக்கு.

# தந்தை என்னோடு இருக்கின்றார்

[சிறுகதை]

பி. அமிர்தம் - நானாட்டான்.

அன்றைய அதிகாலை பொழுது புலர்ந்தது. சூரியன் தனது கிரணங்களால், பூமியின் மீது ஒளியைப் பரப்பிக் கொண்டிருக்கின்றது. பூமி ஒளி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த வேளையில் அந்த கிராமத்தின் மத்தியில் அமைந்திருக்கும் மாதா கோயிலின் அதிகாலைப் பூசைக்கான ஆலய மணியோசை கேட்கிறது. அவ்வேளையில் சிறுவர் கூட்டமொன்று ஆலயத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. அவர்களைத் தொடர்ந்து அந்த ஆலயத்தில் மறைக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் செல்கின்றனர். காலை 06.00 மணிக்க திருப்பலி ஆரம்பமாகி நற்கருணைத் திருவிருந்துடன் நிறைவு பெறுகின்றது.

இறுதியில் பங்குதந்தையின் அறிவிப்பாக மலை நாட்டிற்கு அருகில் அமைந்திருக்கும் அக்கிராமத்தின் பங்குத்தளத்தில் இருந்து மத்திய மலைநாட்டை நோக்கி மறைக்கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மறைக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான சுற்றுலா இப்போது நடைபெற இருப்பதால் இதில் கலந்துகொள்ளும் அனைவரும் இதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட பேருந்து வண்டியில் ஏறி அமர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இவ்வறிவித்தலை கேட்ட சிறுவர்கள் ஒரே உற்சாகமாக அந்த பேருந்து வண்டியை நோக்கி ஓட்டமும் நடையுமாக சென்று இருக்கைகளில் அமரத் தொடங்கிவிட்டனர். இவர்களின் பின்னால் மறைக்கல்வி ஆசிரியர்களும் பேருந்து இருக்கைகளில் அமர்ந்து கொள்வதற்காக சென்று கொண்டிருகின்றனர். அடுத்து பங்குதந்தையும் செல்கின்றார். இவர்களுக்கு பின்னால் ஒரு பெரிய மனிதரும் பேருந்தில் செல்வதற்காக வந்து கொண்டிருந்ததை அவதானித்த மறைக்கல்வி ஆசிரியர்கள் அருட்தந்தையிடம் நமது சுற்றுலா குழுவைச் சேராத ஒருவர் பேருந்தில் ஏறுவதற்கு வந்து கொண்டிருக்கிறார் எனத் தெரிவிக்க அருட்தந்தையும் ஒருவர் தானே பரவாயில்லை விட்டுவிடுங்கள் என்றார் மகிழ்ச்சியாக.

சிறிது நேரத்தின் பின்பு அந்த சுற்றுலா பேருந்து புறப்பட அதில் பயணம் செய்யும் சிறார்களின் சிரிப்பும் அட்டகாசமும் பாட்டும் கும்மாளமும் ஒன்று சேர மகிழ்ச்சியாக பேருந்து சென்று கொண்டிருக்கின்றது. ஏற்கனவே திட்டமிடப் பட்டிருந்தபடி மத்திய மலைநாட்டை நோக்கி பயணம் சென்று கொண்டிருக்கிறது. வழியெங்கும் இயற்கை காட்சிகள் கண்ணை பறித்துக் கொண்டிருக்கிறது. பாரிய மலைத்தொடர்கள், சிற்றாறுகள், சிற்றருவிகள், சமவெளிகள் மற்றும் பச்சைக்கம்பளம் விரித்தாற் போல புற்றரைகள் என்பவற்றின் அழகுகளும், புற்றரைகளின் புற்களை மாடுகள் மேய்வதும், நீர் நிலைகளில் பறவைகளின் இரைச்சல், கூட்டமாக காட்டு விலங்குகள் செல்லும் காட்சிகள் மனதிற்கு இனிமை -யானதாகவும், இரசனையானதாகவும் அமைந்திருந்ததை சிறுவர் மிகவும் மகிழ்வாக கண்டுகளித்துக் கொண்டிருந்தனர்.

பயணத்தில் சிறிது ஓய்வு வழங்குவதற்காக மலைப்பாங்கான இடத்தில் பேருந்து நிறுத்தப்பட்டு இயற்கைக் காட்சிகளைக்



கண்டு களிப்பதற்காகவும் காலையுணவை உண்பதற்காகவும் பங்குத்தந்தை அனுமதியளித்தார். சிறார்கள் உற்சாகமாக காட்சிகளை கண்டுகளித்ததுடன் தாம் கொண்டு வந்த காலை உணவையும் உண்டு மகிழ்ந்தனர். வித்தியாசமான இந்த அனுபவம் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருந்தது. இவ்வேளையில் அழையாத விருந்தாளியாக கலந்து கொண்ட அந்த பெரியவரும் இயற்கை அழகை தனியாக கண்டு களித்தவராக அவர்கள் பின்னே சென்று கொண்டிருந்தார்.

திரும்பவும் பயணம் தொடர்கின்றது தற்போது முழுமையான மலைப் பிரதேசத்தை நோக்கி பேருந்து செல்கின்றது. பாதைகளில் ஆபத்தான வளைவு, செங்குத்தான பாதை, இருண்ட பிரதேசம், குளிர்ச்சியான காற்று இவற்றைக் கடந்து பயணம் தொடர்கின்றது.

தீர்மானித்திருந்த இடத்தை அடைந்ததும் பேருந்து நிறுத்தப்பட அனைவரும் உற்சாகத்தோடு குதூகலமாக இறங்கிச் செல்கின்றனர். சிறுவர்கள் குழுக்களாக பிரிந்து முன்னே செல்ல தொடர்ந்து இவர்களை கண்காணித்தபடி மறைக்கல்வி ஆசிரியர்களும் இவர்களின் பின்னே அருட்தந்தையும் செல்ல இவர்களின் பின்னால் அந்தப் பெரியவரும் சென்று கொண்டிருக்கின்றார். அந்தச் சிறார்களின் கூத்து, கும்மாளம், குறும்பு ஒன்று சேர ஆடல் பாடல்களோடு ஒரே குதூகலத்தோடு குழுக்களாகப் பிரிந்து முன்னே செல்கின்றனர். அவர்கள் மத்தியில் ஒரு குழுவினர் தமது கைச் செலவுக்கென கொண்டுவந்திருந்த பணம் பற்றிய உரையாடல் நடைபெற்றது. அப்போது ஒவ்வொருவரும் தம்மால் கொண்டு வரப்பட்ட பணம் 500.00 ரூபாவெனவும், 1000.00 ரூபாயென்றும், 2000.00 ரூபாயென்றும் அதற்கு மேலும் என்றும் பெருமையாக பேசி வந்தனர்.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சிறுவர்களில் ஒருவன் தான் 100.00 ரூபாதான் கொண்டுவந்ததாக கூறிய போது அனைவரும் சிரித்து இந்தப் பணத்தைக் கொண்டு உன்னால் என்ன பொருள் வாங்க முடியும்? இதனை எதற்குச் செலவு செய்யலாமென ஏளனமாக பேசியதுடன் 100.00 ரூபா, 100.00 ரூபா என அடிக்கடி கிண்டல் செய்து வந்தனர். அதனை பொறுமையுடன் சகித்து வந்த அந்தச் சிறுவன் ஒரு கட்டத்தின் மேல் தாங்க முடியாமல் என்னிடம் 100.00 ரூபா மட்டும்தான் உள்ளது. ஆனால் என்னுடன் என் தந்தை இருக்கின்றார். அவர் என் அருகில் இருப்பதால் எனது தேவைகளை நிறைவு செய்வார். எனக்கு என்ன தேவை என்றும் அவருக்கு தெரியும் என்றான். மேலும், எனக்கு பின்னால் வந்து கொண்டிருப்பவரே என் தந்தை. அவர் என் அருகில் இருக்கிறதினால் இந்த 100.00 ரூபா பணம் போதும். எனக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கப்பெறும் என்றான்.

இதைக் கேட்ட மற்ற சிறார்கள் வாயடைத்துப் போயினர். சிறிது நேரத்தின் பின்பு அவனிடம் மன்னிப்புக் கோரினார்கள். பின்னால் வந்துகொண்டிருந்த மறைக்கல்வி ஆசிரியர்கள் இச் சம்பவத்தை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருக்க இவர்களைத் தொடர்ந்து வந்த பங்குதந்தை அந்தச் சிறுவனின் பேச்சில் இருந்த தந்தை பற்றிய ஆழமான கருத்தை எண்ணி வியந்தவராய் மலைத்துப் போய் நின்றார். ஆம் நமது பரலோக தந்தை நம் அருகில் இருப்பதால் எமக்கு என்ன குறை. எமது தேவைகள் அனைத்தும் நிறைவு பெறும். இப்போது எமக்குத் தேவை என்ன. அந்த தந்தையின் அன்பு ஒன்றுதானே அதனைப் பெற்றுக் கொள்வதற்கு செய்ய வேண்டியது எதுவோ அதனைச் செய்து வந்தால் அவரின் அன்பு என்றும் எம்மேல் இருக்கும் அவரின் அன்பு இருந்தால் எமக்குத் தேவைகளே இருக்காது என எண்ணியவராய் அவர்கள் பின்னே சென்று கொண்டிருந்தார்.

பயணம் மீண்டும் தொடருகின்றது நேரம் நண்பகல் வேளை பேருந்து நிறுத்தப்பட்டு பகலுணவு உண்பதற்காக அமர்த்தப்படுகின்றார்கள். உணவு உண்டு இளைப்பாறிய பின்பு வீடு நோக்கிப் பயணம் தொடர்கின்றது. “தந்தை என்னோடு இருக்கின்றார்” என்று கூறிய சிறுவனின் வார்த்தை பங்குதந்தையின் காதில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. பிரயாணம் நிறைவு பெறும் வரை அவரால் வேறு எது பற்றியுமே எண்ண முடியவில்லை. பங்கு ஆலய முன்றலில் பேருந்து வந்து நின்றதும் அனைவரும் இறங்கிச் செல்கின்றனர்.

பின்பு ஆலயத்திற்குச் சென்று நன்றி வழிபாடு நிறைவு பெற்றதும் பங்குத் தந்தைக்கும், மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும் நன்றி கூறிய மாணவர்கள் தமது வீடு நோக்கி மகிழ்ச்சியோடு செல்கின்றனர். அடுத்தவார ஞாயிறு தின திருப்பலியில் பரலோக தந்தை எம் அருகில் இருப்பதற்கு, அவரின் அன்பை பெறுவதற்கு எமக்குள்ள தடைகள் என்ன? என்ற மையக்கருத்துடன் பங்குத்தந்தையின் கருத்து அமையவிருக்கின்றது. என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பரலோக தந்தை அருகில் இருக்கையில் எனக்கு என்ன தேவை. ஆம். எமது பரலோக தந்தை எம் அருகில் இருந்தால் எதுவுமே தேவையில்லை அவரது அன்பு மட்டுமே போதும் எமது வாழ்வில். நாம் தேடும் செல்வங்களை விட தந்தை என்னோடு இருக்கின்றார் என்ற உள்ளன்பு வளர்த்து உண்மை கிறிஸ்து அவன், அவளாக வாழ்வோம்.

**மன்னா பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் விவிலியக் குறுக்கெழுத்து போட்டிகளுக்கான விடையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றுவதில் கூடிய ஆர்வம் காட்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 03 ✝ 12 ✝ 1951



இறப்பு 17 ✝ 11 ✝ 2022

### அமரர். பீலேந்திரன் செபமாலை


(செம்மண்தீவு, முருங்கன்)

இல்லத்தில் நீ ஒளிவிளக்காய்! உள்ளத்தால் உயர்ந்தவராய்!
குடும்பத்தாருக்கு குலவிளக்காய்! உலகோர் போற்ற வாழ்ந்த - தாயே!
என்றும் எம் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் - அம்மா!
எம்மை உரமூட்டி வளர்த்து விட்டு பண்பாய் வாழ்வதையும்
எங்களுக்கு கற்றுத் தந்துவிட்டு சென்றீர்களே - அம்மா!
என்றுமே ஓயாது உங்கள் நினைவலைகள்
மாறாது உங்கள் மேல் வைத்த அளவுகடந்த பாசம்
ஆண்டவரின் அமைதியில் இளைப்பாற
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

## 19ம், 7ம் ஆண்டு நினைவஞ்சலி





திரு. M.அந்தோனிப்பிள்ளை (சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்)
பிறப்பு : 1933.05.10
இறப்பு : 2003.11.12

திரு. K.F.கிருபைநாயகம் (இலந்தைவான், அடம்பன்)
பிறப்பு : 1945.06.23
இறப்பு : 2015.12.11

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன"
காலங்கள் பல கடந்து சென்றாலும் காலத்தால் அழிக்க
முடியாத உங்கள் அன்பும், பாசமும், ஈகையும்,
இரக்கமும் என்றும் அழியாது! ஆண்டுகள் பல
ஓடிச்சென்றாலும் உங்கள் அன்பும் அரவணைப்பும்
வழித்தடங்களும் வழிகாட்டலும் இன்றும் எங்களை
வழிநடத்துகின்றன!
உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிகாண இறைவனை
வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 02 1937



உதிர்வு 19 01 2021

### அமரர். அந்தோனிப்பிள்ளை ஜெயசீலி

(இத்திக்கண்டல், அடம்பன்)

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்வருக்கே உரியவர்கள்" (உரோ 14:8)

எங்கள் அன்பு தாயே, ஈராண்டு மறைந்தாலும் ஆறிடுமோ!
எங்கள் துயரம் அம்மா நிழல் தந்து எம்மை வளர்த்து நிலைத்து
மண்ணில் வாழவைத்து உறுதியுடன் எம்மைக் காத்த உத்தமியே!
எங்கள் அன்பு தெய்வமே! உங்கள் பிரிவால் துடிக்கின்றோம்.
உங்களை நினைத்து நித்தம் -கண்ணீர் வடிக்கின்றோம் துன்பத்தை
நீங்கள் சுமந்தாலும் எங்களுக்கு இன்பத்தை ஊட்டி வளர்த்தீர்கள் (அம்மா)
மண்ணிலே மீண்டும் வந்து பிறவாயோ! அம்மா மறுபடியும்
எம்மோடு கலந்து வாழ்வாயோ! அம்மா

பிரிவாற்றாமையால் துயருறும்: அன்பு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, அருட்சகோ. ஞானசீலி, அருட்தந்தை. ஞானப்பிரகாசம்

# விண்ணகம் திறந்து...

அன்பின் ச. வில்பிறட்
ஆத்திக்குளி, மாளிகைப்பிட்டி

"புதிய விண்ணகம் தூய்மையான கண்ணாடி போன்ற பசும் பொன்னால் ஆன நகரம் என வர்ணிக்கிறது திரு வெளிப்பாடு நூல்

நற்செய்தி நூல்களிலே இறையாட்சி, விண்ணரசு என மத்தேயுவும் ( 5:3-10 ), இறையரசு என மாற்குவும் (4-26), விண்ணகம் என யோவானும் ( 3-3 ), எசேக்கியேலும் ( 1-1 ) எழுதியுள்ள விண்ணகம் பற்றிய பார்வை

இயேசு இறையாட்சி, விண்ணகம் பற்றிய போதனைக்கு முதலிடம் கொடுக்கிறார் புனித பவுலின் போதனையிலும் இதுவே மையக்கருத்தாக விளங்குகிறது. அ.ப. 19:08

இறையாட்சி பற்றிய மறைபொருள் எமது ஐம்புலன்களை கடந்த உண்மையாகும். இந்த பேருண்மையை இயேசு மட்டுமே அறிவிக்க முடியும். தெரிவிக்க முடியும். இருப்பினும் சிறியோருக்கும் தாழ்ச்சியுள்ளோருக்கும் வெளிப்படுத்துகிறார். ஞானிகளுக்கும் விவேகிகளுக்குமல்ல. மத். 11-25. தன் சீடர்களுக்கும் அதை வெளிப்படுத்தினார்.

இறையாட்சி, விண்ணரசு இறைவனை இயேசுவை தலைமையாக நடுநாயகமாக கொண்ட கண்களுக்கு புலப்படாத வாண்மை மிக்க இறை ஞானத்தால் மட்டுமே உணரக் கூடியது.

இறையாட்சி கண்களுக்கு புலப்படும் முறையில் வராது. இறையாட்சி உங்கள் நடுவில் செயல்படுகிறது. லூக். 17-20

யார் நுழைவர்….?

- ❖ ஏழையின் உள்ளத்தோர். விண்ணரசு இவர்களுக்குரியது மத். 5:3
- ❖ நீதியின் பொருட்டு துன்புறுத்தப்படுவோர். மத். 5:20
- ❖ சிறு பிள்ளைகளைப் போல் மனப்பாங்கு கொண்டோர் மத். 18:03
- ❖ அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையதையும் தேடுவோர் மத். 6:33
- ❖ துன்பம், சோதனை, இடுக்கண், இகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்வோர். மத். 5:12
- ❖ விண்ணரசின் பொருட்டு தம் உடமைகளையும் உயிரையும் துறப்போர்
- ❖ தந்தையின் திருவுளப்படி நடப்போர் மத். 7:21
- ❖ அயலானையும் சகோதரனையும் அன்பு செய்து வாழ்வோர். மத். 25:34
- ❖ பரிசேயரைவிட சிறந்த ஒழுக்கமுடையோர் மத். 5:20

நுழைய முடியாதோர்…………..

- ❖ செல்வர் இறையாட்சிக்கு உட்பட முடியாது. மத். 19: 23,24
- ❖ பரத்தமையில் ஈடுபடுவோர், சிலை வழிபடுவோர், விவசாரம் செய்வோர், தகாத பாலுறவு கொள்வோர், ஒரு பால் புணர்ச்சியில் ஈடுபடுவோர், திருடர், பேராசை உடையோர், குடி வெறியர், பழி தூற்றுவோர், கொள்ளையுடிப்போர் இறையாட்சிக்கு உட்படுவதில்லை. 1கொரி. 6:9-10

விண்ணகம் திறந்தது

நான் யார்? என்ற கேள்வி கேட்டு பேதுருவுக்கு இயேசு பதில் கூறிய போது விண்ணகத்திலுள்ள என் தந்தையே இதை உனக்கு வெளிப்படுத்தினார்.

இயேசு சொல்லி தந்த செபத்தில் " விண்ணகத்தில்



இருக்கின்ற……..மத். 6-9 "

இயேசுவின் திருமுழுக்கின் போது " வானம் திறக்க…….

எசேக்கியேல் " விண்ணகம் திறக்கப்பட கடவுள் அருளிய காட்சியை கண்டேன்" என்கிறார் எசே. 1-5

இறையாட்சி விண்ணக வாழ்வு என்பது இறைவனின் மக்கள் அனைவரும் இறை இயேசுவின் ஒளியில் அவர் உறவில் அவர் பிரசன்னத்தில் ஒன்றாய் வாழ்வதே.

இவ்வாறு வாழும் நிலை விண்ணகம், விண்ணரசு, மோட்சம், இறையாட்சி, இறையரசு, நிலைவாழ்வு போன்ற சொற்கள் ஒரு குறித்த கருப்பொருளையே சுட்டி நிற்கிறது.

விண்ணகம் திறந்தது, வானம் திறந்தது என்பதெல்லாம் இறைவனின் வருகையைப் பற்றி கட்டியம் கூறுகின்றது.

இறைவன் இயேசு விண்ணினின்று மண்ணிற்கு வந்தார். அவரது வருகை நமக்கு அருள்வாழ்வை பெற்றுத் தந்தது. இயேசு நம் உள்ளங்களில் செயல்பட வேண்டிய அருள் தரும் காலம் மலர்ந்துள்ளது.

இறைவன் தன் மக்கள் மீது அன்பு கொண்டு சந்தித்து உறவு கொண்டு அவர்களோடு குடி கொண்டு அவர்களை குணமாக்கி தீய சக்திகள் மேல் வெற்றி கொண்டு விடுதலை வாழ்வை பெற்றுத் தந்த காலம் இது.

விண்ணகம் (இறையாட்சி) கனவை நிறைவேற்ற, இறை திருவுளத்தை நிறைவேற்ற இயேசு பிறந்தார்.

எங்கு கடவுளின் திருவுளம் நிறைவேறுகின்றதோ அங்கு இறையாட்சி விண்ணகம் மலர்கின்றது.

அன்னை மடியில் தாலேலோ
மானிட உருவில் தாலேலோ
மழலை பருவத்தில் தாலேலோ
மானிட மகன் பிறந்தார் தாலேலோ
மகிழ்வோம் வாரீர் தாலேலோ

# கிறிஸ்மஸ் மரம்



❖ கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் பழக்கம் தோன்றுவதற்கு ஸ்காண்டி நேவியர்கள் தான் காரணம்.

❖ இவர்கள் கிறிஸ்துவை வழிபடுவதற்கு முன்னர் மரங்களை வழிபட்டனர்.

❖ அவர்கள் மனம் மாறிய பின்பு, பண்டிகைத் தினங்களில் மரங்களை அலங்கரித்தனர்.

❖ 1841ம் ஆண்டு இங்கிலாந்து இளவரசர் ஆல்பர்ட் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மரத்தை 'குழந்தைகளுக்கு' அறிமுகப்படுத்தினார்.

❖ அதுமுதல் இது உலகெங்கும் வேகமாக பரவியது. கிறிஸ்துமஸ் மரம் என்பதற்கு பசுமை மாறாத மரம் என்று பொருள்.

❖ சீர்திருத்தவாதியான மார்ட்டின் லூத்தர் என்பவரால் 16ம் நூற்றாண்டில் ஊசி இலை மரமானது அலங்கரிக்கப்பட்டு கிறிஸ்மஸ் மரம் உருவாக்கப்பட்டது என்று குறிப்புக்கள் சொல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 | 16 |
| 03 | 11 |
| 1937 | 2022 |



**அமரர். மரிசால் ஞானப்பு**

கள்ளிகட்டைக்காடு

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று
இன்று காணாமல் போனதெங்கே? நீ காட்டிய
அன்பு வழியில் இன்று நாங்கள் கால் பதித்து
நடக்கின்றோம்...
உன் புன்சிரிப்பான பூ முகம் பூமியில் இனி வருமோ
நாங்கள் தவிக்கின்றோம் தவிப்பை யார் துடைப்பார்...
காலம் ஏன் எம்முடன் என்னை கனதூரம் கொண்டு
செல்லவில்லை, பாதி வழியில் விட்டு சென்றதனால்
பாவிகள் நாம் பரிதவித்து துடிக்கின்றோம்,
சோகம் நிலையில்லை சொர்க்கம் உனக்காக

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 | 12 |
| 06 | 11 |
| 1948 | 2022 |



**அமரர். டெனிஸ் பிலிப்பு குலாஸ்**

வங்காலை

உண்மையான அன்பிற்கும் நல்லதோர் பண்பிற்கும்
முன் உதாரணமாக எமக்கு வாழ்ந்து காட்டிய
பாசமிகு ஐயாவே!
"நீங்கள் கடவுளின் பார்வையில் ஓர் முழுநிறைவு"
மனைவிக்கு பாசமிகு கணவனாய்,
பிள்ளைகளுக்கு முன்மாதிரியான தந்தையாய்,
பேரப்பிள்ளைகளுக்கு அன்புமிகு ஐயாவாக
விளங்கிய நீங்கள் இறைவனின்
இல்லத்தில் எங்களுக்காக பரிந்து பேசுவீர் என்பது
எங்களது நம்பிக்கை.

உங்கள் பாசமான நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 28 | 24 |
| 05 | 11 |
| 1933 | 2022 |



**பங்கிராஸ் வரவணிக்கா**

சுய வீடமைப்பு திட்டம், சாவற்கட்டு, மன்னார்

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
அன்போடும் பண்போடும் எம்மை வளர்த்து
அறிவூட்டி எம்மை வாழ வைத்த அன்பு தாயே
உம்மை இழந்து தனியாய் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும்
பிராத்திக்கின்றோம்

உங்கள் நினைவுகளுடன் என்றும் வாடும்
மகள் குடும்பத்தினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 15 |
| 02 | 11 |
| 1936 | 2022 |



அமரர்

**அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை**

காங்காணிதீவு, நானாட்டான்

உங்களது அன்பு முகம் மறைந்தாலும்
என்றும் நீங்கள் விட்டுச் சென்ற நினைவலைகள் மாறாது
மாதம் ஒன்று கடந்து சென்றாலும்
என்றும் மறையாத நினைவுகள் எம்முடனே தங்கும்
இவ்வுலகின் நீண்டகால நினைவுகளை எண்ணியே
இருப்போம் உம் சிந்தனையில் நாம் வாழும் வரையிலே
உங்கள் ஆன்மா இறைவன் அருளில் இளைப்பாற
எந்நாளும் வேண்டி நிற்கின்றோம்.

உம் பிரிவால் நினைந்துருகும்:
குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 06 | 29 |
| 06 | 12 |
| 1932 | 2021 |



**அமரர். மேரி மலர் அந்தோனி துரம்**

(மலரம்மா ரீச்சர்)

தள்ளுகுடியிருப்பு

கால நதியின் ஓட்டத்தில் ஆண்டு ஒன்று ஆனதம்மா
நீங்கள் வாழ்ந்து வந்த வசந்தமாளிகை களை இழந்து
பொலிவிழந்து போனதம்மா இதய ஓசை மட்டும்
உங்கள் இருப்பையும் கொரோனாவின் அலைவீச்சையும்
எண்ணி எண்ணி ஏங்கி நிதம் நிற்கின்றது வையகத்தில்
உங்களை மீண்டும் காண வழிகள் ஏதும் உண்டோ என்று
விழிகளும் சோகம் சுமக்கின்றனவே உங்கள் மறைவுடன்
எல்லாமே தூரம் சென்று விட்டதம்மா...

உங்கள் நினைவில் என்றும்
அருமை மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,
உறவுகள், குடும்பத்தார்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 23 | 04 |
| 06 | 12 |
| 1954 | 2022 |



**அமரர். பற்றிமாறோஸ் நவரெட்ணம்**

(புதுக்கமம், மன்னார்)

அன்பிற்கு அர்த்தம் நீங்கள் - எம் ஆற்றலின்
ஆணிவேர் நீங்கள் இறையுறவில் இமயம் நீங்கள்
ஈகையில் இணையில்லாதவர் நீங்கள்
உயரிய சிந்தனைகளைத் தந்தவர் நீங்கள்
ஊக்கமளிப்பதில் உன்னதர் நீங்கள் ஐயமே இல்லை
இறை சந்நிதியில் நீங்கள் ஒரு குறையின்றி
மகிழ்ந்திருப்பீர்கள் ஓர் நொடியேனும் மனந்தளராது
நாங்கள் இறைவனோடு இணைந்து வாழ்ந்து
உங்கள் பண்புகளை பிரதிபலித்து வாழ எமக்காக
வேண்டுங்கள் நீங்கள்.

உம் பிரிவால் நினைந்துருகும்: கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 | 07 |
| 07 | 12 |
| 2001 | 2021 |



**A. ஹென்றி கமிலஸ்**

கீரி, மன்னார்

ஓராண்டு கடந்தும் - வீட்டில் உன் பெயர் ஓயாது
உச்சரிக்கப்படுகிறது.
ஓலமிட்டு அழுதும் ஒன்றுமே நடக்கவில்லை
ஒப்படைக்கின்றோம் அனைத்தையும் ஆண்டவனிடம்!
இறை இயேசுவின் உயிர்ப்பதனை இளைமையிலேயே சுவைத்திட
இறைவனடி சேர்ந்தாயோ ஹென்றி இடைவிடாது
செபிக்கின்றோம் உனக்காக. நிலையில்லா இவ்வுலகு
நிலைக்குமென நினைந்து நிலைகுலைகின்றோம்
நிலையான வாழ்வுக்காக உழைப்போம்
நிம்மதியைக் காண்போம்

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 12 |
| 09 | 12 |
| 1939 | 2021 |



**திருமதி. சூசையப்பு ஆனாள்**

1ம் வட்டாரம், வங்காலை

ஆண்டவனுக்கு அன்னையைத் தந்த ஆனாள் என்று
நாமம் கொண்டு வாணாள் எல்லாம் சுற்றம் போற்ற
தானாய் உதவி செய்தவளே ஆறாய் பெண்பெற்றாய் உலகிற்கு
ஆசிரிகைகள் ஆக்கி நீ தந்தாய் இரண்டாய் ஆண்பிள்ளை
நீ பெற்றாய் இந்த அகிலத்தில் உயர்ந்திட நீ உழைத்தாய்
தேனாய் நீ பேசி தேவன் புகழ்பாடி ஊனாய் உருகி நீ மறைந்தாய்
உலகில் எமக்குக் கலங்கரை நீதானே உம்மைப் போல்
வேறுதுணை எங்கே ஆண்டவன் சந்நிதியில் நீ எமக்காய்
ஆறுதலும் தேறுதலுமாய் பரிந்து பேசு நினைவில்
என்றும் அழியாது நிலைப்பாய் எம் அன்னையே நீ

பிரிவால் துயருறும்
அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளகைள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1982 | 2020 |
| 06 | 01 |
| 15 | 28 |



அமரர்

**யேசுராசா டொனால்ட் இன்பராஜ்**

மாவிலங்கேணி, முருங்கன்

எல்லாமே நடந்து கொண்டிருக்கிறது
இருந்தும் நீ இல்லாத இடைவெளி பெரியது
மிகப்பெரியது மகனே! நீ இல்லாத எங்கள் நாட்கள்,
இப்படித்தான் இருக்கும் என்பது உனக்குத்
தெரிந்துதான் இருந்தது. இருந்தும்...
அமைதியில் நீ இளைப்பாற நீ தந்த அன்பின்
நன்றியோடு செபிக்கிறோம்.

பிரிவால் துயருறும்
அம்மா, சித்தி, பெரியம்மாமார், சகோதரர்கள்,
மருமக்களோடு உன் மாமி

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 | 18 |
| 10 | 12 |
| 1959 | 2019 |



**அமரர் அந்தோனிப்பிள்ளை மத்தேஸ்பிள்ளை**

ஆண்டுகள் மூன்றான போதும் ஆறவில்லை
எம் துயரம் அன்பென்னும் மழை பொழிந்து
அகிலத்தில் எம்மை வாழ வைக்க கலங்கரை விளக்காய்
காவல் தெய்வமாய் எங்களை பாதுகாத்தீர்களே அப்பா!
உங்கள் பிரிவால் ஏங்குகின்றோம். காலமெல்லாம் எம்மை
காத்திருப்பாய் என்றிருக்க கண்ணீரைத் தந்துவிட்டு
விண்ணுலகம் சென்றனையோ ஆற்றொண்ணாத் துயரமது
உள்ளத்தில் ஊற்றாகி ஓடுதப்பா
பூமிதனில் பலயுகம் கடந்தாலும் உன்னன்பை
என்றும் மறவோம் அப்பா. உங்கள் ஆன்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்
அன்பு மனைவி, பாசமுள்ள பிள்ளைகள், தாய்
மற்றும் மாமி, உற்றார் உறவினர்கள்.

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 | 21 |
| 04 | 12 |
| 1967 | 2017 |



**அமரர் கத்தறின் யசோதா (ஆசிரியை)**

(ஆத்திக்குளி, முருங்கன்)

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"
அதையறிந்தோம் உம் அன்பான அரவணைப்பில்
உம் அன்பை அதிகமாக யாம் அறிந்தோம்...
நான்கு ஆண்டுகள் முடிந்தாலும்
மூழ்கவில்லை உம் நினைவு முழுதாய் எம்மை விட்டு...
உம் அன்பை நாம் உணர வேண்டுகின்றோம்
மறுபிறப்பு அப்போதும் உம் பிள்ளைகளாய்
அமர வேண்டும் உம் மடியில்
உம் ஆன்மா சாந்திபெற உமக்காய் வேண்டுகின்றோம்...

பிரிவால் துயருறும்
கணவர் மற்றும் பிள்ளைகள்

## 9ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 20 |
| 08 | 12 |
| 1961 | 2013 |



**திருமதி. பிரகாசம் கிறேஸ்**

(உபதபாலதிபர், சூரியகட்டைக்காடு)

உதரம் கொடுத்து எமக்காய் உம் ஊன் உறக்கம் தவிர்த்து
உண்மையை ஊட்டி ஊட்டி வாழ்வில்
உயர வைத்த தாயே
உம்மை உயிருள்ள வரையும் மறவோம் சேயே
அம்மா நீங்கள் உயிர்நீத்து ஒன்பது ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் ஒரு கணம் கூட மறவோம் நாமே!
பார்த்து பார்த்து வளர்த்தீர் எம்மை
பரலோக தந்தை காப்பார் உம்மை
அம்மா என்ற சொல்லுக்கு அர்த்தமல்லோ நீங்கள்
அனுதினம் உமக்காய் செபிப்போம் நாங்கள்
ஆண்டவர் உம்மை அருகிருந்து காப்பார்
அழுகிறோம் நாங்கள் - உம்
அன்பை நாளும் நினைந்து நினைந்து

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரக்குழந்தைகள்


"மன்னா பத்திரிகை"
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ.இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தி[illegible] அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org